உ

கணபதிதுணை.

திருக்கைலாயபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனத்துத்

திராவிடமகாபாஷிய கர்த்தராகிய

சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த

குளத்தூர்

# அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

இது

திருவாவடுதுறையாதீன வித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களெழுதிய

குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பிரசுரம்—கஉ.

மதுரைத் தமிழ்ச்சங்கமுத்திராசாலைப் பதிப்பு.

ர்மதி-௵ ஐப்பசி௴

1921.

1-DEC 1921
940
4.21
925:38211 KU
N21
17604

உ

கணபதி துணை.

திருக்கைலாயபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனத்து

திராவிடமகாபாஷிய கர்த்தராகிய

சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த

குளத்தூர்

# அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

இது

திருவாவடுதுறையாதீன வித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களெழுதிய

குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பிரசுரம்—கஉ.

மதுரைத் தமிழ்ச்சங்கமுத்திராசாலைப் பதிப்பு.

துர்மதி-ஹு ஐப்பசிமீ

1921.

940/424

1-DEC 1921

ஆவணக் காப்பக
-600 008.
176041

உ

கணபதிதுணை.

176041

# நூலாசிரியர்கருத்து.

மனம்வாக்கி லெட்டாத சிற்சத்தி யாயிடினு
    மன்பதைக ளுய்யவேண்டி
மலையரையன் முதலோ ரிடத்தவ தரித்தொரு
    மடப்பிள்ளை யாய்வருதலால்
இனநாட்டி வாழ்த்திடுவர் பெரியோர்கள் வாழ்த்தற்
    கெடுத்தவித் தாரகவிதாம்
எண்ணிடிற் பல்வா மவற்றிற்கு முதலாக
    வேன்றபெண் பிள்ளைக்கவி
முனிவோட்டு காப்புநற் கீரைதால் சப்பாணி
    முத்தம்வா ரானைமற்று
மொழியுமம் புலிப்பருவ மம்மானை நீரூசன்
    முறையினை யிருபருவமும்
நனிவாய்த்த வகவலின் விருத்தத்தி னாற்பாடி
    நவிலுமுத் திங்கண்முதலா
நயந்தமு வெழுதிங்க ளளவினிற் கேட்பிக்கு
    நன்மய தெனப்புகல்வரே.

சிற்சத்தி–ஞானசத்தி. மன்பதை–மக்கட்கூட்டம். ஏன்ற–பொருந்திய. மடம்–அழகு. முனிவு–வெறுப்பு. வித்தாரகவி பலவற்றின் முதலாவது பிள்ளைத் தமிழே யெனவும், மூன்றுந்திங்கள் முதலாக இருபத்தொருதிங்கள் காறுங் கேட்பிக்கத்தக்க தெனவும் இலக்கணவிளக்கப் பாட்டியலிற் கூறுமாறு காண்க. பின்னும், அம்புலிப்பருவத்தின்பின் பெண்பாற்குரிய கழங்கு, அம்மானை, ஊசல் என்னு மூன்றுங்கூட்டிப் பருவம் பத்தாகக் கூறியிருக்கின்றது. பிற்காலத்திற் கழங்கைநீக்கி நீராடலைக்கூட்டிப் பத்துப்பருவமாகக் கவிகள் கூறினரென்க.

## அவையடக்கம்.

இளம்பருவ விளையாட்டை நோக்குழித் திருவுரு
விடத்தாசை மிகுதியுண்டா
மென்பதால் வித்தார கவிக்கெலா முன்னுற
வியன்றபிள் ளைக்கவியிதைக்
குளந்தையிற் சோமேசர் மார்பினைக் கொங்கையாற்
குழைவித்த வமுதவல்லி
கோமளப் பருவத்தி லருகொன்று தாதியர்சொல்
கூற்றெனப் புகழ்தலுற்றேன்
வளம்பெருகு மிமையவரு மேத்தொணுப் பெருமாட்டி
மகிமையென் புன்மொழிகளால்
வாழ்த்தரிய தாமெனினு மாங்கவள் கிரிக்கிறைவன்
மகளாகி யதுவுமல்லால்
உளங்கொடியர் வாழ்வலைச் சேரியினு மவதரித்
தொளிர்பாசி சங்குபூட்டி
உண்மகிழ்ந் தருளுந்தலி னென்மொழிக் கும்பெரி
துவந்தருள் சுரக்குமெனவே.

குளந்தை – குளத்தூர். சோமேசர்–குளத்தூரி லெழுந்தருளியிருக்கின்ற சுவாமியின் பெயர்.

சோமேசர்மார்பினைக் கொங்கையாற் குழைவித்த வரலாறு:—கைலையிலிருந்துவந்த வுமாதேவி, காஞ்சியிற் கம்பாநதியிற் சிவபூசை செய்யும்போது, பரிசோதனை நிமித்தமாக ஏகம்பநாதர் கம்பாநதியைப் பெருகிவரச்செய்ய, உடனே உமாதேவி, அதுகண்டஞ்சிச் சிவலிங்கத்தை வாரிக்கொண்டுபோய்விடுமேயென்று கருதித் தன் இருகையால் அச்சிவலிங்கத்தைத் தழுவி யணைத்துக்கொண்டாள்; அப்போது நதியும் விலகிப்போயினது. ஏகம்பநாதரும் அவ்வுமாதேவியினன்பிற்குத் திருமேனிகுழைந்து வளைத்தழும்பும் முலைச்சுவடும் பதியப்பெற்றுக் காட்சியருளினர் என்பதாம். இதனைக் காஞ்சிப்புராணந் தழுவக்குழைந்த படலத்திற் காண்க.

உ

கணபதிதுணை.

குளத்தூர்

# அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

OFFICE ... 1-DEC 19..

விநாயக வணக்கம்.

மணிகொண்ட கோடொரு மருங்குண்மை யாற்பெண்மை
வடிவென்று மஃதின்மையோர்
மருங்குண்மை யாலாண்மை வடிவென்று மீதுகீழ்
மாறிய திருக்காட்சியால்
அணிகொண்ட வுயர்திணைய தென்றுமஃ றிணையென்றும்
யார்க்குங் கிளக்கவரிதாம்
ஐங்கரச் சிந்துரத் தின்கழற் செஞ்சரண
மஞ்சலித் துத் துதிப்பாம்
பணிகொண்ட துத்திப் படத்திற் கிளைத்தவிர்
பருஉமணி விளக்கினொருபாற்
பாயிருட் படலஞ் செறிக்தொளிர்வ தென்னவப்
பாம்பணை கிடக்குமொருவன்
திணிகொண்ட மல்லற் புயக்குவடு விம்மத்
திளைக்குமகள் வாணிபிரியாத்
தென்குளந் தாபுரி யிருந்தவமு தாம்பிகை
செழுந்தமிழ்க் கவிதழைப்பவே,

பெண்மை வடிவென்றும்—அக்கோட்டைத் தனமாகக்கருதுவதனாற் பெண்மைவடிவென்று மென்க. அஃதின்மை—அக்கோடில்லாமை. மீதுகீழ் மாறியதென்பது உயர்திணையவயவங்கீழும் அஃறிணையவயவ மேலுமாக மாறியிருப்பதென்க. பருஉ—பருமை. குளந்தாபுரி—குளத்தூர்.

# காப்புப்பருவம்.

இப்பருவம், பிள்ளையைத் திருமான்முதலிய தெய்வங்களாற் காவல் செய்விக்கும்படி தாதியர்கள் கூறும்பருவமாம்.

## திருமால்.

சீர்கொண்ட கஞ்சக் கிழத்திதன் காந்தனைச்
சிறைசெய்த வாறறிந்தாற்
செயிர்த்துநந் திருமனைவி மகன்மருகி தமையெலாஞ்
சிறைசெய்யு மென்றறிந்தும்
ஏர்கொண்ட மைத்துனக் கேண்மையா லர்ச்சுனற்
கிறுதிநாள் பயவாமையே
எண்ணிமுன் பரிதியைப் பரிதியாற் றடைசெய்த
வேந்தற் பிரான்புரக்க
பேர்கொண்ட மேனிலச் சோபான மிசையேறு
பேதைமார் முகநோக்கிநம்
பேராசு கொள்ளவரு மதிபோலு மிதுவெனப்
பெரிதுமேக் குற்றவர்கடங்
கார்கொண்ட பின்னற் கரும்பாந்தள் கண்டுளங்
கவலாது களிகூர்ந்து தண்
கலைமதியம் வைகுபொழில் சூழ்குளத் தூர்வருங்
கடவுட் பிராட்டிதனையே. (1)

(1) கஞ்சக்கிழத்தி—தாமரையாகிய மனைவி. காந்தன்—நாயகனாகிய சூரியன். சிறைசெய்தவாறு—சக்கரத்தான் மறைத்துச் சிறைசெய்தவிதம். மனைவி—இலக்குமி. மகன்—பிரமன். மருகி—சரஸ்வதி. சிறைசெய்யும்—வெளிவராமல் உள்ளிருக்க இதழ் குவித்துக்கொள்ளுமென்பது கருத்து. பரிதியை—சூரியனை. பரிதியால்—சக்கரத்தால். அருச்சுனன், தன் மகனாகிய அபிமன்னனைக்கொன்ற சயத்திரதனை "அந்திபடு மவ்வளவில் ஆவிகவரேனேல் வெந்தழலில் வீழ்வ"னெனச் சபதங் கூறியதறிந்து, இரவு வரும்வரை மறைந்திருந்த அச்சயத்திரதன், இரவு வந்ததென வெளிவரும்படி கண்ணன் சக்கரத்தாற் சூரியனை மறைத்த கதையைப் பாரதம் பதினான்காம்போர்ச்சருக்கத்தி லறிக. மேனிலச் சோபானம்—மேன்மேடைநிலத்துள்ள படி. எக்குற்று—கவலையுற்று. பின்னற்கரும்பாந்தள்—ச[illegible] கரியபாம்பு. உளங்கவலாது—இம்மதி பின்வருங் கரும்பாம்பா[illegible] [illegible]னம்வருங்[illegible]

## சிவபெருமான்.

### வேறு.

அளிசு ரந்தமரர் பசிகெ டும்படியி
　　னமிழ்து தந்தகதிர் கொள்சடைக் காட்டிடை
அழல்வி டஞ்சொரியு மாவி னம்பசிய
　　வறுகு வெண்டலைகள் பல்குறச் சூட்டியும்
அரிய யன்பரச வவரி டும்பைகெ று
　　மலர்செ ழுங்கமலம் வெல்கரத் தோட்டிடை
அணைவு றும்பொருள்கள் கருக வெம்புசுட
　　ரவிரு மங்கியினை வெய்தெனக் காட்டியும்
இளிவ ரும்பொன்மலை வளையு முன்பவுண
　　ரெயிலொ ருங்கவிய வெள்ளுபொற் றோட்கிடை
இடுவ னங்களினி லுபிர்ம டிந்தவர்த
　　மிகழு மென்பினையு மைதெனப் பூட்டியும்
எழுத ருஞ்சொன்மறை முடிவு மன்பர்தம
　　திதய மும்பரவ நல்குமெய்த் தாட்டுணை
எமது புன்றலையு முறந யந்துமரு
　　ளியப ரம்பரனை யுள்ளுறச் சேர்த்துதும்
தளிர்து வன்றியிருள் படநி ழன்றுகுளிர்
　　தழுவி வண்டுதுதை செய்துணர்ப் பூத்திரள்
ததைவு கொண்டுநறு மணம ளைந்துமகி
　　தலம சும்புபட வெள்ளமட் டூற்றெழு
தரவ ளர்ந்துமுகி லகடு டைந்தழகு
　　தபவு தைந்துதிசை யெல்லையைக் காத்திடு
தறுக ணெண்கரியை முடுகு றுங்கருவி
　　தருடி தென்றெவரும் விள்ளமொய்த் தார்த்தவிர்
ஒளிபு மிழ்ந்துலவு பரிதி மண்டலமு
　　முடுப மண்டலமு நில்லெனத் தாழ்த்திவின்
னுலகு சென்றுசுரர் தருவொ டும்பழகி
　　யுறவு கொண்டுமகிழ் பல்வளக் காக்களின்
உறைப சுங்கிளிகள் சுருதி சந்தையுட
　　னுரைசெய் கின்றதனை மல்குபுத் தேட்குலம்
ஒளிபி ருந்துகவர் பதிகு லந்தைவரு
　　முரைவி ளர் ... ல்வி ...

(2) அமிழ்துதந்தகதிர்—சந்திரன். எயில்—திரிபுரக்கோட்டை. வனம்—சுடுகாடு. ஐது—அழகுடையது. சூட்டியும், காட்டியும், பூட்டியும், நயந்தும் அருளிய பரம்பரனெனக் கூட்டி யுரைக்க. துவன்றி—நெருங்கி. நிழன்று—நிழல்செய்து. துதைசெய்—நெருங்குதல்செய்கின்ற. ததைவு—செறிதல். மகி—பூமி. அசும்புபட—வழுக்கலுண்டாக. வெள்ளமட்டு—தேன்வெள்ளம். அகடு—வயிறு. தப—கெட. முடுகுறுங்கருவி—ஓடுதல்செய்யுங் கருவி; ஓட்டுங்கோல் என்க. மொய்த்தார்த்து—கிளைகளடர்ந்துநிறைந்து. உடு, பம் என இரண்டும் விண்மீனைக்குறித்த ஒருபொருட்பன்மொழி. சுருதி—வேதம். சந்தை—சொன்னதை மீட்டுஞ்சொல்லல். ஒளி—மறைவு.

## விநாயகக்கடவுள்.

### வேறு.

ஒற்றைச் சுதைத்தனுக் கோட்டியெங் கணுமின்னி
யோவாது மும்மாரிபெய்
தொண்பூ தலத்துலவு செங்கொண்டல் போலுமென்
றுன்னியச் சுற்றியாமிதற்
கெற்றைக்கு மூர்தியா யுற்றிடக் கடவமென்
றிருண்மேக மருகுவந்தாங்
கிலகுகரு மூடிகத் தாதிப் பிரான்சரண
மேத்தெடுப் பாமெம்பிரான்
கற்றைப் பிறைக்கொழுந் தொளிர்சடில வட்டமேற்
கணமணிப் படம்விரித்துக்
கண்வளரு மகிநீர்மை தலையுவா ஞான்றுசெங்
கதிர்க்கிர கணங்கடுக்கும்
பெற்றித் திறந்தெரிந் தானந்த வெள்ளப்
பெருங்கடல் குடைந்தாடுறாஉம்
பெண்ணணங் கரசியைத் தென்குளத் தூரெம்
பிராட்டியைக் காக்கவெனவே. (3)

(3) சுதைத்தனு—வெண்ணிறமுள்ள வில்லையென ஐயுருபு விரிக்க. கோட்டி—வளைத்து. அச்சுற்று—அச்சமுற்று. ஊர்தி—வாகனம். மூடிகம்—பெருச்சாளி. விநாயகரைச் செம்மேகமென்றதனுற் கோட்டினைத் தனுவாகவும், காந்தியை மின்னலாகவும், மதத்தினை மும்மாரியாகவு முருவகஞ்செய்தமை காண்க. சடிலவட்டத்தைச் சூரியனுகவும், அச்சடிலத்திலிருக்கின்ற பாம்பைச் சூரியனை[illegible]ாகவுங் கொள்க. கணம்[illegible]ிரட்சி. அகி—பாம்பு. நீர்மை—

## முருகக்கடவுள்.

மாங்குயி றுரந்துசுவை யூற்றெழ மிழற்றுமொழி
வானமீன் மாதரறுவர்
மருமத் தெழுந்தபொன் வள்ளத்தி னமிழ்துண்டு
மருவிவாழ் தற்குரியதன்
றேங்கமல வீட்டினைத் தனதெனக் கொண்டுவாழ்
திசைமுகனை வெய்துயிர்த்துச்
சிரநான்கு மோதிப் புடைத்துப் பிணித்துவன்
சிறையிட்ட தேவைநினைவாம்
ஓங்கலொரு வில்லா வளைத்தெயி னகைத்தனலை
யூட்டியருள் சோமேசனார்
ஒருமூ விழிக்கிடைந் தஞ்சிச் சரண்புகுந்
தோலமிடு புண்டரீகம்
பூங்குவளை மாரனுக் கருள்செய்து முகமெனப்
போர்கொண்ட வாள்விழியெனப்
பொய்த்தநுண் ணிடையெனத் தாங்குங் குளந்தா
புரிக்குளமு தைக்காக்கவே. (4)

(4) மிழற்றல்-சொல்லல். வானமீன்மாதரறுவர்—கார்த்திகைப்பெண்களறுவர். வள்ளம் என்றது தனத்தை. அமிழ்து-பால். கமலவீடு-தாமரைப் பூவாகிய வீடு. சரவணப்பொய்கையிலவதரித்துக் கார்த்திகைப்பெண்கள் பாலுண்டு தாமரைப்பூவில் வசித்திருந்ததைக் குறித்தமை யறிக. வெய்துயிர்த்து-பெருமூச்சுவிட்டு. ஓங்கல்-மலை. மூவிழி-சோமன் சூரியன் அக்கினியாகிய மூன்றுகண்கள். சரண்-அடைக்கலம். ஓலமிடல்-இடர்ப்பட்டா ரபயங்கேட்டிரங்கிக் கூறல். புண்டரீகத்தை முகமெனவும், குவளையை விழியெனவும், மாரனை இடையெனவுந் தாங்கும் அமுதையென்க

## பிரமதேவர்.

தவளக் குரூஉமணி குயிற்றியொளிர் தமனியத்
தனதுமனை வாயினிறுவுந்
தண்ணிய விதழ்க்கத வடைத்துத் திறக்குந்
தனித்தொழிலை வண்டுமூரலும்
பவளச் சரோருகத் தன்னைதன் ஞெடுற்
பவித்தபுல வற்குமந்தப்
பண்ணவற் செ[illegible] புலவற்கு [illegible]
பண[illegible]

கவளக் கடாங்கவிழ் கவுட்டுணை நெடுங்கைக்
களிற்றுப் பிடர்த்தலைவருங்
கண்ணா யிரங்கொண்ட விண்ணாடர் கோமகன்
கற்பகச் சோலைவிடபங்
துவளக் குடங்கைத் தலத்தினிற் கோட்டித்
துணைத்தழுலை மாதர்மலர்கொய்
தூமணித் தெற்றிக ணெருங்கிய குளந்தைவரு
சுந்தரப் பெண்ணமுதையே. (5)

(5) காஞ்சிப்புராணநகரப்படலம் உகூ-ஆம் கவியில், பொன்னுக்குத் தமனியமென இந்நூலாசிரியர் கூறலால், தபனியமெனக் கூறுவது பாடமன்றென்க. தவளம்–வெண்மை. குரூஉ–நிறம். குயிற்றி–பதித்து. மனை–தாமரைமலராகிய மனை நிறுவுதல்–நிறுத்தல். அன்னையென்றது இலக்குமியை. புலவன்–முன்னது சந்திரன், பின்னது–சூரியன். பணித்த–செய்த. கவளம்–யானைக்குத் திரட்டிக்கொடுக்குமுணவு. கடாம்–மதம். கவுட்டுணை-இரண்டுகதுப்பு. விடபம்–கொம்புகள். கோட்டி–வளைத்து. துணைத்த–இரண்டாகிய. தெற்றிகள்–சித்திரகூடங்கள்.

## தேவேந்திரன்.

### வேறு.

அதிருந் தரங்கக் குண்டகழி
யளறு படப்புக் குழக்கிமுழக்
கசனிக் கிகலிக் கலித்துமதத்
தடுக்க லெடுத்துத் தெறித்துவெகுண்
டெதிருங் குழூஉக்கொள் படைகவல
விடறுங் கறைத்தாட் பரூஉத்தடக்கை
இறைக்குங் கடவெண் களிற்றியானை
யெருத்தத் திவரும் புருகூதன்
முதிருஞ் சுவைத்தெள் ளமிழ்தொழுகு
முழுவெண் ணிறத்து மதிக்குழவி
முருகு விரியுங் கடவுணதி
முழுகித் திளைக்குஞ் சடைப்பெருமான்
கதிரும் விழிக ளிருள்சீப்பக்
கங்குற் பொழுதி னெருங்கிருந்து
... குறிப்பிற் குளநாணுங்
... (6)

(6) குண்டு—ஆழம். அளறு—சேறு. உழக்கி—கலக்கி. அசனி—இடி. கலித்து—ஒலித்து. அடுக்கல்—மலை. தெறித்து—சிதறி. படை—சேனை. கறைத்தாள்—உரற்கால். களிற்றியானை—ஒருபொருட்பன்மொழி. எருத்தம்—பிடரி. இவரும்—ஏறும். புருகூதன்—யாகத்தில் அதிகமாக வழைக்கப்படுவேன், (இந்திரன்). மதிக்குழவி—இளஞ்சந்திரன். கடவுணதி—தெய்வநதியாகிய கங்கை. சீப்ப—துடைக்க, நீக்க. கமலாகரி—குளத்துறையுடையவளாகிய அமுதாம்பிகை. கமலம்—நீர். ஆகரம்—உறைவிடம்.

## இலக்குமி.

கடிப்போ தலர்த்திக் கருஞ்சுரும்பர்
களித்துத் துயில்கூர் கற்பகப்பூந்
தானம் பயிலுங் காமர்நகர்க்
கவலை துரந்தின் னமிழ்தளித்துப்
படிப்பாற் பயிலு மகளிடத்துற்
பவித்துப் புவன மூன்றனையும்
பரிக்குந் திகிரிப் படைப்பாணிப்
பகவன் மருமத் துறைமடந்தை
விடப்பாம் பிரவி வெம்மைமிசை
மேவா வண்ணங் குடைகவிப்ப
விரிக்குங் கதிர்ச்செம் பவளநிற
வேணி யணையாப் புனிற்றுமதி
முடிப்பா லரசு வீற்றிருக்கு
முதல்வ னிடப்பா லிருந்துலக
முழுது முயிர்த்த குளந்தைநகர்
மொய்பூங் குழலைப் புரக்கவே. (7)

(7) கடி—வாசனை. துரந்து—நீக்கி. பரித்தல்—காத்தல். பாணி—கை. பகவன்—மாயோன். மருமம்—மார்பு. மடந்தை புரக்க எனக்கூட்டுக. இரவி—சூரியன். வேணி—சடை. புனிற்றுமதி—இளஞ்சந்திரன்.

## சரஸ்வதி.

### வேறு.

அளிக்கா தாவுற்றுச் சுவைத்தகள்
அளித்தார் வனசத்துப் பொருட்டா...
உளத்தா மரைக... திளைத்தவன்
உ...

களத்தா லமடக்கிச் சுரர்க்கிடர்
 களைத்தே யவொறுத்துக் கடைக்கணி
குளத்தூர் நயனத்தற் கிடத்தமர்
 குளத்தூ ரமுதத்தைப் புரக்கவே. (8)

(8) ஆதரவு—விருப்பம். அளித்து—கொடுத்து. ஆர்—தங்கிய. பொருட்டு—கொட்டை. திளைத்து—அனுபவித்து. உரை—சொல். களம்—கண்டம். ஆலம்—விடம். குளத்தூர்நயனத்தர்—நெற்றியிற்பொருந்திய கண்ணையுடையவர்.

துர்க்கை அல்லது காளி.

வேறு.

துளிக்கும் பசுந்தே னுவட்டெடுத்துச்
 சொரியுஞ் செழுந்தா மரைப்பொருட்டுத்
தோன்றற் பெருமான் முதற்கடவுட்
 டொகுதிப் பைங்கூழ் களைக்கருக்கிக்
களிக்கு மகிடா சுரக்களையைக்
 களைந்து சிரமேற் பாசடையிற்
கமல மெனத்தாள் பதித்திவர்ந்த
 கன்னி யெனுந்தெய் வதங்காக்க
பளிக்கு மணிமா டங்கடோறும்
 பதிந்த தமது சாயலினைப்
பாரா வினமென் றிளஞ்சேய்கள்
 பரிந்து பரிந்து வருகவென
விளிக்குங் குளந்தைத் திருநகரின்
 வெளிய மதியந் தவழுமுடி
விளங்குங் கதிர்ச்செம் பவளமலை
 மீது படர்பைங் கொடியினையே. (9)

(9) உவட்டெடுத்து—பெருக்கெடுத்து. பைங்கூழ்—பசியபயிர். மகிடாசுரன்—எருமைக்கடா வடிவங்கொண்டிருந்த வோரசுரன். மகிடாசுரனைக் களையென்றதற்கேற்பக் கடவுட்டொகுதியைப் பைங்கூழென்றார். பாசடை—பச்சையிலை. கன்னி—துர்க்கை. சாயல்—நிழல். சேய்கள்—பிள்ளைகள். பரிந்து—அன்புற்று. [illegible] க்தல். பவளமலை என்றது சிவபிரானை; கொடியென்ற [illegible]

## சத்தமாதர்.

வேறு.

இலகொளி யுமிழ்தரு சிறையோ திமத்தவள்
எழிலுறு தவளவல் விடையூர் திறத்தவள்
எறுழ்வலி மயில்கட வினள்வே றிரிப்பவள்
இருசிறை யொருகலு ழனையேறி நிற்பவள்
உலகதிர் தாவரு மரியே றுகைப்பவள்
உமிழ்கட மழைபொழி யயிரா வதத்தவள்
உழிதரு குழிவிழி யுடல்பேய் நடத்துநள்
உவரெழு மகளிர்த மொளிர்தாள் பழிச்சுதும்
அலகைக ணடமிடு மழலார் களத்தினில்
அமரர்க டபுமுடல் கழிபா னிறக்கலன்
அரவொடு திணிவரை நிகர்தோ ளிடைப்பொலி
அணிபென வணிதரு பெருமா னிடத்தமர்
நிலவிழி நகையவ ளிருமூ வகைப்படு
நெறிகளு நிறுவிய வொருமா தவக்கொடி
நிலமிசை யுயரிய கமலா கரத்துறை
நிருமலி மலைமக ளனையே புரக்கவே. (10)

(10) ஓதிமம்—அன்னம். தவளம்—வெண்மை. எறுழ்வலி—மிக்கவலி யென்க. உழிதரல்—சுழலல். முதலிரண்டடியில் அபிராமி, மகேசுவரி, கௌமாரி, நாரணி, வாராகி, இந்திராணி, காளி என்னுஞ் சத்தமாதரையுங் கூறியது காண்க. அழலார்களமென்றது சர்வசங்காரவக்கினியார்ந்த இடமாகியமயானமென்க. தபுதல்—இறத்தல். பானிறக்கலன் என்றதனால் என்புமாலையென்க. நிலா வென்பது நிலவெனக்குறுகிநின்றது. இருமூவகைப்படுநெறி—அகமும் புறமு மாகிய அறுவகைச்சமயநெறிகள். அறுவகைச்சமயவிவரத்தைச் சிவஞான சித்தியார் சுபக்கம் மங்கலவாழ்த்துக் கவியுரையிலறிக.

## முப்பத்துமுக்கோடிதேவர்.

வேறு.

சிறகரளி மொய்த்திதழ் கொழுதிமது வைப்பசி
சிதைய மடுத்துக் களித்தாடு தேமலர்
செருகுமள சக்கன மதர்நெடுவி மிச்...
...ரிவி...

திணிமுலைமலைச்சொரி திதலைநிதி யத்திரள்
　　செழுவிய பொற்புக் கடற்பாய வாரெழில்
செறிதரும டித்திரை யிடையறலொ முக்கிய
　　திறமை நிகர்த்தொத் தொழுக்காமு ரோமமுங்
குறைவற வளித்தருள் குவலயம டக்கொடி
　　குளிர்கெட நச்சிக் கறைப்போர்வை யானுடல்
கொளுவியதெ னத்திசை முழுவதும டக்கிய
　　குமரி யிருட்டைப் படச்சாடு மாதவர்
குலவுகிர ணச்சுவை யுணவினையு ணத்தனி
　　குறுகிய பொற்சக் கரச்சேவல் போலொளிர்
குருமணிகு யிற்றிய புயமலைகு ழைக்கெதிர்
　　குயமுடி யைச்சற் றெடுத்தேறு பார்வையும்
வெறிகமழ முற்பல நறுமலர்ம றைப்பினில்
　　விழைத னலத்தைப் படித்தேக நீள்செவி
வியனிலமி றுத்தமை யெணிமறமி குத்தவை
　　வெருவி விழச்செற் றுகைத்தோடி நீடிய
விரிமலர்த மக்கொரு மறைவிடமெ னப்படும்
　　விதியெ னெனப்புக்கு விற்காதி னேடமர்
வினையிலிக ரத்துழை சடைவனமு றற்கெழ
　　விரைவில் விளைத்துக் குதித்தாடு பார்வையும்
இறைமையும ளப்பறு மழகொளிர நிற்பவ
　　ளிமைய மலைக்கட் கொடிப்போல மேவிய
இனியமட மைக்குயின் மரகதம யிற்பெடை
　　யிரையு மிருக்குக் குளத்தூரி னுடியென்
னிருமைவினை முற்றற வெனையுமடி மைக்கொளு
　　மெழிலமிழ் தச்சத்தி வைப்பான காவலர்
எரிகதிரு ருத்திரர் விறல்வசும ருத்துவ
　　ரெனுமிவர் முப்பத்து முக்கோடி தேவரே. (11)

(11) கொழுதி–கோதி. சிதைய–கெட. அளகக்கனம்–கூந்தலாகிய மேகம். திதலை–தேமல். பொற்புக்கடல்–அழகாகிய கடல். மடித்திரை–வயிற்றிலுள்ள மடிப்பாகிய [illegible] அறல்–கருமணல். திறமை–வகை. குவலயமடக்கொடி–பூமிதேவி [illegible] கொளுவுதல் [illegible] தச்செய்தல், சண்டு [illegible]

லென்பது கருத்து. குமரியிருட்டு—விடியற்கு முன்னிருள். குயிற்றிய—பதித்த. குயம்—தனம், பார்வை என்றது குயத்தின் நோக்கத்தை. வெறி—மணம். உற்பலம்—நீலோற்பலம். மறைப்பு—ஒளிப்பு. தன்னலம்—தன்னுடைய நன்மை. தன் என்றது கண்ணைச்சுட்டியது. வியனிலம்—விசாலமான இடம். இருத்தமை—தங்கியிருந்தமை. மறம்—சினம். அவை—அவ்வுற்பலமலர்கள். செற்றுகைத்து—கெடுத்துத்தள்ளி. மறைவிடம்—ஒளிப்பிடம். வினையிலி—சிவபிரான். உழைமான். அமர் விளைத்து எனக்கூட்டுக. அமர்—போர். இறைமை—தலைமை. இருக்கு—வேதம். அமிழ்தச்சத்தி—அமுதாம்பிகை. வைப்பு—சேமநிதி. கதிர்—சூரியர். மருத்துவரிருவர், வசுக்களெண்மர், உருத்திரர்பதினொருவர், ஆதித்தர் பன்னிருவர், ஆக முப்பத்துமூவரறிக. கூந்தலாகிய மேகமானது விழிக்கடலைக் குடித்துக் கறுத்து, மூலையாகிய மலையிற்சொரிந்த தேமலாகிய நிதியத்திரள், அழகாகிய கடலிற்பாய, அக்கடலிலுள்ள வயிற்றுமடிப்பாகிய திரையிற் கருமணலை யொதுக்கிய வகையொத்து ஒழுங்காயிருக்கின்ற (உந்திமேலெழும்) உரோமவொழுங்கும்; பூமிதேவி கரும்போர்வையா லுடம்பை மூடியதுபோல மூடியவிருளை யழிக்குஞ் சூரியகிரணத்தை யுண்ணவணுகிய சக்கரவாகப்புட் போல மணிக்குழைக்கெதிரே தலையெடுத்துநோக்குந் தனத்தினோக்கமும்; தமக்குப் பகையாகிய குவளைமலர்கள் தம்முடையநலத்தைப் படித்துச்செல்லச் செவியினிடத்துத் தங்கியிருந்தமையெண்ணிக் கோபமிகுத்து அவைகள்விழக் கெடுத்துத்தள்ளி, அம்மலர்களுக்கு மறைவிடமெனப்படு நிலைமையென்னென்று காதுடனமர்விளைத்து விளையாடும்பார்வையும்; தலைமையும், அளப்பருமழகொளிர நிற்பவளெனக் கூட்டியுரைக்க.

காப்புப்பருவமுற்றிற்று.

---

## இரண்டாவது

# செங்கீரைப்பருவம்.

(o)

இப்பருவத்திற்கு, இலக்கணவிளக்கத்திலே, குழவி தலையெடுத்து முகமசைத்தாடும் பருவமென்பர்; சிலர் செவ்வியசொற்களைப் பேசும் பருவமென்பர் (கீர்—சொல்). உண்மை நோக்குமிடத்து, ஒருகாலைமடக்கி ஒருகாலைநிமிர்த்து இரு கைகளையும் பூமியிற் பதியவைத்து முகத்தை மேனிமிர்த்தாடுதல் இப்பருவத்தின் செய்கையாதலால், அப்பொழுது தாதியர்கள் செ[illegible]ாற்களைச் சொல்லவேண்டுமென வேண்டிக்[illegible]லாகக் கூ[illegible]நுத்தாகச்
[illegible]சால்[illegible]

பொருவரிய வண்டப் பரப்பைமுழு தாளும்
புராதனர் முகத்துவிழியாப்
போந்துலவு நங்கொழுநர் தம்மைத் தடுத்திடர்
புரிந்தகைக் கமலநமையும்
பருவர லுறுத்துமென் றஞ்சிமென் குமுதமும்
பங்கயமு மொன்றையொன்று
பாதுகாப் பத்துயிலு மென்றா மடந்தையர்
பரிந்துகொண் டாடுசீர்த்தி
இருகைமல ரும்புவி பதித்தொரு முழந்தா
ளிருத்தியொரு தாண்மேனிமிர்த்
திந்த்ரதிரு விற்கிடை தொடுத்தவெண் டாளநிரை
யேய்ப்பநுதல் வேர்பொடிப்பத்
திருமுக நிமிர்த்தொரு குளந்தையமு தாம்பிகை
செங்கீரை யாடியருளே
சிற்சபையி னெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில்
செங்கீரை யாடியருளே. (1)

(1) புராதனர்—பழையோராகிய சிவனார். கொழுநர் என்றது சூரிய சந்திரரை. இடர்—திருக்கண்புதைத்தலாலுண்டாகிய துன்பம். நமை—நம்மை. பருவரல்—துன்பம். ஒன்றையொன்று பாதுகாப்பத் துயிலலாவது, பகலிலே குமுதம் குவிந்திருக்கத் தாமரை மலர்ந்திருத்தல்; இரவிலே தாமரை குவிந் திருக்கக் குமுதம் மலர்ந்திருத்த லென்க. பரிந்து—அன்புற்று. குழவிப்பிணிக்குத் தாய் மருந்துண்ணல்போல் உயிர்களின் பாசநீங்கக்கருதி அம்பிகை திருநடனங் காணுமுறையாலும், நடேசரும் அவளைநோக்கி யாடுந்தன்மையினாலும் ஆட்டு மயில் என்றாரென்க.

பொங்கரி பரந்தசிறை வண்டினம் விருந்துணப்
பூங்கமல நாண்முகையெலாம்
போதாக வெழுபரித் தேர்கடாய்க் கடன்முகடு
பூப்பவரு பரிதிப்பிரான்
சங்கின முயிர்த்தவெண் டாளவட மணியுமித்
தாமரை முகிழ்த்துணையும்யான்
... ாத மெல்லிதழ் முறுக்குடைத் தல்லாது
... றருகுடேர்த்து ...

வெங்கதிர்க் கற்றைகள் பரப்பியுல வுதலேய்ப்ப
மின் னுமக ரக்குழைகதிர்
வீங்கிள முலேத்தலே யுமிழ்ந்து தண் புயமீது
விளையாடி நிற்பவதனத்
திங்கண்மிசை யாடக் குளந்தையமு தாம்பிகை
செங்கீரை யாடியருளே
சிற்சபையி னெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில்
செங்கீரை யாடியருளே. (2)

(2) அரி—ஒளி. முகை—அரும்பு. இத்தாமரைமுகிழ்த்துணையும்—தனங்களாகிய இந்த இரண்டு தாமரை யரும்புகளேயும். தண்டாத—நீங்காத. தணவல்-நீங்கேன். கற்றை-தொகுதி. மகரக்குழை—மகரவடிவமையச்செய்த காதணி. பரிதிப்பிரான்போந்து கதிர்க்கற்றைகள் பரப்பி யுலவுதலேய்ப்ப மகரக்குழை முலைத்தலேக் கதிருமிழ்ந்து விளையாடிநிற்ப என இயைத்துக்கொள்க.

கார்பூத்த மறுவுண்ட வெண்கதிர்க் கலேமதி
கவின்றநின் கமலவதனங்
காண்டோறு மறுவற்ற மதியீ தெனவுட்
கவன்றுமுன் னிற்கவஞ்சிப்
பார்பூத்த தென்குளத் தூர்ப்பொங்கர் காவணம்
பரியமதி னூழையூடு
பையென நுழைந்தொளித் தோடநிற் பணியவரு
பங்கயச் செல்விமுதலோர்
ஏர்பூத்த வங்கையா விந்தமலர் கூம்பவவ
ரிணைவிழிக் குவளையெல்லாம்
இரும்புனற் றேத்துளி பொடித்துமிழ்ந் தலரவரு
ளெனுமமிழ்த தாரைகான்று
சீர்பூத்த முகமதிய மாடவமு தாம்பிகை
செங்கீரை யாடியருளே
சிற்சபையி னெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில்
செங்கீரை யாடியருளே. (3)

(3) மறு-களங்கம். கவன்று-கவலேயுற்று. பொங்கர்—சோலே. காவணம்-பந்தல். பரிய-பெரிய. நூழை-சிறுவாயில். புறப்பொருள்வெண்பாமாலேயுரையிற் காண்க. மறுவுண்டமதி, நின் வதனங்காண்டொறு ...ன்னிற்கவஞ்சிப் பொங்கர் முதலியவற்றினுழைந்தோடவும், கூம்பவும், ... யமாடச் செங்கீரையாடியருளெனக் ...

மணிதுற்ற தவிசெனப் பருமணிப் பருமம்
வயங்குமடி மீதிருத்தி
மதிக்கடவு டன்மனை யெனக்குலாய்த் தன்னமிழ்தம்
வாக்குவ தெனத்தீம்பயம்
பணிலத்தின் வாய்க்குமுத மூட்டிமற் றிதுமாசு
பரியாது சாலாதெனப்
பாரிழைத் தொருபொட்டு நுதன்மதிக் கிட்டுப்
பசுங்கழையின் மஞ்ஞைநின்றுங்
கணிபெற்ற புயமே லணைத்திரு மதித்தேவ
ரளவளாய்க் குழீஇயதேய்ப்ப
அழகிய முகத்துமுத் தாடியெழின் மேனைசி
ராட்டமகிழ் கூர்ந்துகொடியேம்
திணிவைத்த நெஞ்சங் கரைக்குமமு தாம்பிகை
செங்கீரை யாடியருளே
சிற்சபையி னெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில்
செங்கீரை யாடியருளே. (4)

(4) தவிசு—ஆசனம். பருமம் - பதினன்குகோவைமணிவடம், திருவிளையாடற்புராணந் தடாதகைப்பிராட்டியார் திருமணப்படலத்தில், கடுஅ-ஆவது கவியிலறிக. மனையென - மனைவியென்று. தீம்பயம் - தித்திப்புள்ள பால். பணிலம் - சங்கு. வாய்க்குமுதம் - வாயாகிய குமுதமலர். மாசு - களங்கம். பரியாது - தங்காது. சாலாது - ஒவ்வாது என்பது கருத்து. பாரிழைத்து - பூமியினீரிட்டுத் தேய்த்து; பூமியிற்றேய்த்துக் குழைத்த மண்ணையெடுத்து நெற்றியிற் றிலதமிடுவது மரபெனவறிக. கழை - மூங்கில். மேனை - மலையரசன் மனைவி.

முக்கனி செறித்தநறு நீர்ப்பந்தர் முல்லைவெண்
முகையனைய மூரலறுகான்
மூசிய விளம்பொங்கர் தேசுறு மலர்ப்பொய்கை
முதலான வறம்யாவையும்
தொக்கமறை யாகம விதிப்படி யியற்றுநாட்
டோலாத கருணைகூர்ந்து
... வொமந்தரு ... சோம நாதனைர்

இக்கரமு மிக்கரமு மித்தனமு மித்தனமு
மென்றுயிர்த் தோழியர்களாய்
எத்துமட மாதரார் தம்மைத் தெளித்திடுவ
தேய்ப்பமுக மதியமசையத்
திக்கெட்டு மேத்துங் குளந்தையமு தாம்பிகை
செங்கீரை யாடியருளே
சிற்சபையி னெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில்
செங்கீரை யாடியருளே. (5)

(5) முக்கனி–வாழை, மா, பலாக்கனிகள். மூரல் - சோறு. அறுகால்-வண்டு. அறம் முப்பத்திரண்டாவன - ஆவுரிஞ்சுதறி முதலாயின. காஞ்சிப் புராணம் தழுவக்குழைந்தபடலம் உ௬அ-ஆவது கவிமுதலாக உ௬௬-ஆவது கவி வரை கூறியிருக்கின்றமை காண்க. இயற்றுநாள் - காஞ்சியிற் செய்யுநாளில். குழைவித்தகதை. அவையடக்கத்தி லறிக. என்று தெளித்திடுவதேய்ப்ப எனக் கூட்டுக. தெளித்திடுவதேய்ப்ப - தெளியச்செய்வ தொப்ப.

வேறு.

பொங்கெழி னின்முக மாடுதொ றுங்கமழ்
போதரி நீள்விழிகள்
பொற்செவி யிற்பல காலுமெ திர்ந்து
புகுந்து மறிந்துலவச்
செங்கதிர் நீள்குழை தம்மொடு தாமெதிர்
சென்று மணிக்கலொடுஞ்
செயிரறு பொன்னி னரும்பு பிதிர்ந்து
தெறித்திட மோதுதிறந்
தங்கிளை சார்ந்திடை யாவகை சாற்றமொய்
தாம வயிற்படையாற்
றண்குரு தித்துளி வீழ்தர வீரர்க
டம்மொடு தாமெதிரா
அங்கை கலந்தம ராடுத லாமென
வாடுக செங்கீரை
அளந்தறி யாத குளந்தை நிலாவமு
தாடுக செங்கீரை. (6)

(6) மறிந்து - மடங்கி, திரும்பி. செயிரறு - குற்றமற்ற. பிதிர்ந்து தெறித்திட–உதிர்ந்து சிதர. [illegible] சார்ந்திடையாவகை சாற்ற-வீரர்களாகிய [illegible]
[illegible]கிளைகளணுகிப் போரி[illegible]

மொய்தாமவயில்-மொய்த்த மாலையணிந்த வேல். ஆமென-ஒக்குமென்றுசொல்ல. கண்ணிற்கு அயிலும், மணிக்கல்பொன்னரும்புக்குக் குருதித்துளியும், குழை கட்கு வீரர்களு முவமமாம்.

பல்லுயி ருங்களி கூர்கரு ணைக்கடல்
பம்பிவளைந் ததெனப்
பாலொளி கான்ற நறும்புனல் சூழ்ந்து
பரந்தொளிர் கம்பையிடை
வில்லுமிழ் மின்னுரு வச்சுடர் வேணி
விண்ணோனை வடந்தழுவி
வீங்கிள வெம்முலை மார்புழ வங்கையின்
மேதகு தோள்குழையப்
புல்லி யணைப்பது போல்வயி ரங்கள்
பொதிந்தவிர் தொட்டிலினிற்
பொன்னணி பாவையொ டாடி யணைத்துப்
பொழுது கழித்தருளும்
அல்லி மலர்க்குழல் வல்லி பராபரை
யாடுக செங்கீரை
அளந்தறி யாத குளந்தை நிலாவமு
தாடுக செங்கீரை. (7)

(7) பம்பி-பரவி. கம்பை-கம்பாநதி. வில்-ஒளி. வடம்-மணிவடம். மார் புழ-மார்பிலே யுழுதலைச்செய்ய. அல்லி-அகவிதழ். கம்பையாற்றுக்கு வயிரத் தொட்டிலும், வேணிவிண்ணோனுக்குப் பொன்னணிபாவையையு முபமானமாகக் கொள்க.

குலத்தில் வளர்த்திடு மன்னையர் செந்துகில்
சூர்மடி மீதிமையக்
குன்றி னரக்கலர் வாழ்க்கை யெனக்களி
கொண்டு குலாவியவர்
கலைப்பொலி முகமதி யுங்குழன் முகிலுங்
கண்டென வாய்க்குமுதங்
கதிர்த்த நகைத்து [illegible]

மூலைக்கம லச்செழு முகையொடு நட்பு
முயங்கிட வாடலுறும்
மூரி வளத்துத ரத்திரு வாலெழின்
மொய்த்து மிகத்தழைய
அலக்க ணறச்சுவை யாரமிழ் துண்பவ
ளாடுக செங்கீரை
அளந்தறி யாத குளந்தை நிலாவமு
தாடுக செங்கீரை. (8)

(8) மடிமீது குலாவியெனக் கூட்டுக. அரக்கலர் வாழ்க்கை-செந்தாமரையில் வாழ்ந்திருத்தலென்க. அரக்கு-சிவப்பு. அவர்-அவ்வன்னையர். அரும்ப-அரும்பும்படி. மூலை-அன்னையர்மூலை. "கைக்கமலங் குவியா, மூலைக்கமலச்செழு முகையோடு நட்பு முயங்கிட" எனவே கையைக்குவித்து அன்னையர் மூலைமேல் வைத்து என்பது கருத்தாயிற்று. முயங்கல்—தழுவுதல். வாடலுறுமூரிவளத்துதரத்திருவால் - பசியால் வாடலுறும் பெரிய வளமுடைய வயிருகிய அழகிய ஆலிலை. அலக்கண்—துன்பம். அமிழ்து-மூலைப்பாலென்க. குலாவி, அலா, குவியா, முயங்கிட, தழைய, உண்பவளெனக் கூட்டுக.

வேறு.

வான மெழுங்கரு மேக வினங்கள்
வறந்தி ரம்போய்வன்
மால்வரை யெங்கணு மோடிட வென்றிமிர்
வண்டு தும்போது
கான முயங்கிய வாச நறுங்குழ
னந்தா வந்தீப
நாவி லெழுந்தொளிர் தூம வொழுங்கென
நன்றூர் மென்சாயன்
மேனி நிறந்தரு மேனி யணங்கு
விளைந்தார் வங்கூர
மீறி வளர்ந்தழ கான குளந்தை
விளங்கா நின்றாறு

தேனிறை கொன்றையி னானிட நின்றவள்
செங்கோ செங்கீரை
தேவர் தொழுங்கலி யாண சௌந்தரி
செங்கோ செங்கீரை. (9)

(9) வறந்து-வற்றி. மால்-பெருமை. இமிர்-ஒலிக்கின்ற. முயங்கிய-தழுவிய. நந்தா-கெடாத. தூமம்-புகை. சாயல்-அழகு. மேனி-வடிவம். நிறம்-ஒளி. போது நானமு முயங்கிய குழலானது தீபநாவி லெழுந்தொளிர் தூமவொழுங்கு போலிருக்க மேனியிலே நிறத்தைத்தரு மேனையென்க. மேனிநிறத்திற்குத் தீபத்தை யுபமானமாகக் கொள்க. செங்கீரை செங்கீரையென்பது செங்கோ செங்கிரை என மருவிற்றென்பர்.

கோல நெடும்பனி மாலிமை யம்பயில்
கொம்பே செம்பாத
கோகன தந்தொழு வாருள நின்ற
கொழுந்தே பைந்தேனே
ஞால மளந்தவ னொடு மரும்பெற
னங்காய் வெங்கோப
நாம விடஞ்செறி காமரு கண்டர்த
நண்பே தண்போதோ
டேல மளைந்திருள் கூரு நறுங்குழ
லெந்தா யெம்பாசம்
ஈறு படும்படி ஞான மணங்கம
ழின்பே யன்பாளர்
சீல மிகுங்கம லாகரம் வந்தவள்
செங்கோ செங்கீரை
தேவர் தொழுங்கலி யாண சௌந்தரி
செங்கோ செங்கீரை. (10)

(10.) கோலம்—அழகு. இமையம்—இமையமலை. நங்காய்—பெண்களிற் சிறந்தவளே. நண்பே-சிநேகமானவளே. ஏலம்-மயிர்ச்சாந்து. இருள்கூரும்—கருமைமிகும். ஈறு-நாசம். சீலம்-நல்லொழுக்கம்.

செங்கீரைப்பருவமுற்றிற்று.

மூன்றுவது

# தாலப்பருவம்.

இப்பருவம், பிள்ளையைத்தொட்டிலிலிட்டு மகளிர் நாவினுற்பாடும் பாட்டுடன் அத்தொட்டிலையாட்டும் பருவமென்க; இக்கருத்தை மூன்றுவது கவியிற் காண்க. தால்-நா. தாலாட்டுப்பருவமென்றதைத் தாலப்பருவமென்று கூறுவர்,

மதுரங் கொழிக்குங் கொழுந்தேறன்
மடுத்துச் சுரும்ப ரடைகிடக்கு
மலர்ப்பூந் தடத்தைக் காண்டலுஞ்செம்
மணிகால் குடுமிப் பணியுலகம்
இதுவு மாவந் தனக்கிடமா
யிருக்குங் கொல்லோ மென்றழுக்கா
றெய்தித் தன்கீழ்ப் படத்தாழ்த்து
மியல்பை யறிந்தா லெனக்கரைக்கட்
பொதுளி யுறவு கொண்டநறும்
பொதும்பர் நாக ருலகெனுமொரப்
புமையாற் புலவோர் பதிதாழ்த்திப்
பொற்று துதிர்க்குந் திருக்குளந்தைப்
பதியின் மகிழு நறியசுவைப்
பாகே தாலோ தாலேலோ
பணில முயிர்த்த தரளநகைப்
பாவாய் தாலோ தாலேலோ. (1)

(1) தேறன்மடுத்து-தேனையுண்டு. குடுமி-உச்சி. பணியுலகம் - நாகலோகம். இதுவும்-இத்தடாகமும். அரவம்-பாம்பு. அழுக்காறு-பொறாமை. தன் கீழ்ப்படத்தாழ்க்குமியல்பையறிந்தாலென-(பணியுலகமானது அத்தடாகத்தைத்) தனக்குக்கீழாகத் தாழச்செய்யுந் தன்மையையறிந்தாற்போல. இதனுற்றடாகத்தினுழம் நாகருலகத்திற்குங் கீழாயிருக்கின்ற தென்பதுணர்க. கரைக்கட்பொதுளியுறவுகொண்ட நறும்பொதும்பர்-(அத்தடாகக்)கரையிடத்து நெருங்கி அதனோடு சிநேகங்கொண்ட நல்ல சோலையானது, தன்சிநேகனைத் தன்கீழ்ப்படத் தாழ்த்திய பணியுலகத்தைத் தாழ்த்தமுடியாமை கருதி என்பது வருவித்துரைக்க.

ஒப்புமையால்—பெயரொப்புமையாயிருப்பதால். புலவோர்பதிதாழ்த்தி—தான் மேலுயர்ந்து தனக்குக்கீழாகப் புலவர்பதியைத் தாழச்செய்து என வருவித் துரைத்துக்கொள்க. சோலை, புலவர்பதிக்கு மேலுயர்ந்திருக்கின்ற தென்ப துணர்க. புலவர்-தேவர்.

இருள்கால் சீத்துச் சோதிவெயி
லெறிக்குஞ் செக்கர் மணித்தொகையின்
இழைக்கும் பசும்பொற் றலத்துயர்த்த
விருங்கே தனத்தின் மிசையுயிர்கட்
கருள்கால் கலைவெண் முழுமதிய
மமரும் பரிசு தழனுப்பண்
அமைத்த தூணைத் தருந்தவஞ்செய்
யறவோர் கடுக்கு மேனிலத்துச்
சுருள்கான் மலர்ப்பூங் கூந்தலிளந்
தோகை யனையார்க் கெதிர்நடிக்குஞ்
சுரமா மகளிர் விழித்தொழிற்குத்
தோற்றுச் சமழ்க்குந் திருக்குளந்தைப்
பருகா வமிழ்தே பெருங்கருணைப்
பரையே தாலோ தாலேலோ
பனில முயிர்த்த தாளநகைப்
பாவாய் தாலோ தாலேலோ. (2)

(2) கால்சீத்து—துடைத்து. செக்கர்—சிவப்பு. இழைத்தல்—செய்தல். உயர்த்த-உயரவெடுத்துக்கட்டியிருக்கின்ற. கேதனம்—கொடி. பரிசு—தன்மை. கடுக்கும்—ஒக்கும். பொற்றலத்துயர்த்தகொடியில் மதி தங்கியிருக்குந்தன்மை, தழலினடு நாட்டிவைத்த தூணின்மேலிருந்து தவஞ்செய்வோரை யொக்கு மென்க. வடிவமுழுதும் விபூதியையணிந்த அறவோரென வருவித்துரைக்க. மேனிலம்—மேடைநிலம். விழித்தொழில்—இமைத்துச்சுழலல்; தோற்று—அத் தொழில், (இமையாநாட்டமுடைய தங்கட்கின்மையாலே) தோல்வியுற்று. சமழ்த்தல்—நாணுதல்.

மணங்கெழ் வனச மூற்றெடுத்து
மதுவார் பொகுட்டுச் சுருச்சுமந்து
வயிறு வருந்திக் கருவுயிர்க்க
வயின்பார்த் துழலும் பெடைஞெண்டைக்

கணங்கே ழுயின்முட் டாட்படுத்துக்
கவைத்தா ளிடையற் றலையூடு
கருவண் டினங்கள் புடைசூழக்
கலந்து மூரலத் துவக்குண்டு
சுணங்கோர் முலைப்பெண் ணணங்குநினைச்
சுமந்து மகளிர் தாலெடுப்பத்
துயிலு மணித்தொட் டிலைக்காட்டுந்
தொடுநீர் வாவித் திருக்குளந்தைப்
பணங்கே ழரவப் பேரல்குற்
பரையே தாலோ தாலேலோ
பணில முயிர்த்த தாளநகைப்
பாவாய் தாலோ தாலேலோ. (3)

(3) பொகுட்டு—தாமரைப்பூங்கொட்டை. சுறு—சுறுமீன். கருவுயிர்க்க—பிரசவிக்க. வயின்—இடம். கணம்—திரட்சி. கேழ்—நிறம். அயில்—கூர்மை. முட்டாட்படுத்து—முள்ளையுடைய தண்டாகிய தாளிறு லகப்படுத்தி. கவைத் தாளிடையற்று—அந்த ஞெண்டின் பிளவுபட்ட தாளினலே யிடையே வெட்டப் பட்டுத் தண்டறுபட்டு. அலையூடு—திரைகளினூடே. மூரல—ஒலிக்க. துவக் குண்டு—(கச்சினற்) பிணிப்புண்டு. சுணங்கு—தேமல். தாலெடுப்ப—நாவாற் பாட்டையெடுத்துப் பாட. வனசமானது, பொகுட்டிலே சுறுவைச்சுமந்து ஞெண்டின்தாளால் தண்டுவெட்டப்பட்டு அலையூடு (அசைந்து) வண்டுகள் மூரல நின்னைச் சுமந்து மகளிர்தாலெடுப்பத் துயிலுந் தொட்டிலைக்காட்டு மென்க.

கந்தங் கமழு நறுங்களபக்
கலவை யளைந்த முலைக்குவடாங்
கரடக் களிற்றின் மருப்பினிடைக்
கவின்ற வுரோமப் புழைக்கரத்தால்
நொந்தங் கலமந் திறுங்கொடிபோ
னுணுகித் துவளுஞ் சிற்றிடையார்
நுவலுங் கிளவிக் கிடைந்தகுயி
லுவலா தடங்கி யவ்விசையின்
சந்தம் பலகா ளகம்பயிலத்
தழுவிச் சிலநாள் வாய்விண்டு

சாற்றி யொப்பு நோக்கியொவ்வாத்
தவறாற் பின்பும் வாயடைக்கும்
பைந்தண் பொழில்சூழ் குளந்தைநகர்ப்
பரையே தாலோ தாலேலோ
பணில முயிர்த்த தாளநகைப்
பாவாய் தாலோ தாலேலோ. (4)

(4) மூலைக்குவடாகிய மருப்பிடையென்க. கவின்றரோமப் புழைக்கரத்தால்-அழகுசெய்த வுரோமவொழுங்காகிய துவாரமுள்ள துதிக்கையினால். நுவலல்-சொல்லல். அடங்கி-கார்காலத்திலொடுங்கி. சாற்றி-வேனிற்காலத்துச் சாற்றியென்க. பின்பும் வாயடைக்கும்-மறுபடியுங் கார்காலம்வந்தவுடன் வாயடைக்குமென்க.

சுரும்பர் துளைக்க வுவட்டெடுத்துச்
சொரியு மிரதச் செழுங்கரும்பைச்
சுவைத்துக் கதலிக் குலைசாடித்
தூங்குந் தெங்கம் பழஞ்சிதறி
விரிந்த பசுநெட் டிலைக்கமுகின்
மேவிக் ககனக் தருவையதன்
மீது படர்பூங் கொடிவழிபோய்
மிதித்துக் குனித்து விளையாடி
வரிந்த கழையி னெடுங்கயிற்று
வழிபோய் நடிக்கும் பொருநர்திற
மானக் குரக்குக் குலங்குதிக்கும்
வளஞ்சேர் பொதும்பர் சூழ்குளத்தூர்
பரிந்து தொழுவோர் மனத்துறையும்
பாகே தாலோ தாலேலோ
பணில முயிர்த்த தாளநகைப்
பாவாய் தாலோ தாலேலோ. (5)

(5) உவட்டெடுத்து-பெருக்கெடுத்து. சுவைத்து - கடித்துச்சுவைத்து என்க. தெங்கு-தென்னை. ககனத்தரு-விண்ணிலுள்ளதருவாகிய கற்பகம். குனித்து-நடித்து. வரிந்தகழை-கட்டியிருக்கின்ற மூங்கில். பொருநர்-கூத்தர். திறம்-நன்மை. குரங்குக்குலம் விளையாடிக்குதிக்குமெனக் கூட்டுக.

வேறு.

சுலவித் தூளப் பவளக் குவைகள் சுருட்டிக் கரைபுரளுந்
துவலைத் திரைமைக் கடனின் றெழுமிரு சுடர்கண்மு னச்சுடர்தஞ்
சிலையிற் கவினக் குயிலு முருப்புன றீயைப் புடைபெருகச்
சிந்திப் பனிகூர் பொழுதிற் புனலிற் சேர்ந்தற மாற்றுநரை
உலறத் தெறுவெப் புடைவே னிற்பொழு தொள்ளெரி வாய்த்தவநோன்
புழப்ப வரைப்பொரு நொச்சி மதிற்குல மோங்கு குளந்தையெனுந்
தலனிற் பொலிவு பெறப்பயி லுங்கொடி தாலோ தாலேலோ
தகரக் குழலா யமுதப் பிடியே தாலோ தாலேலோ. (6)

(6) சுலவி—சூழ்ந்து. துவலைத்திரை—நீர்த்துளிகளையுடைய அலை. அச் சுடர்தஞ்சிலை—அந்தச் சந்திரகாந்தக்கல் சூரியகாந்தக்கல். கவின—அழகு பொருந்த. குயிலும் உரு—(மதில்களிற்) பதித்தவடிவங்கள். அறமாற்றுநர்—அற மாகிய தவஞ்செய்வோ ரென்க. உழப்பவர்—செய்பவர். பொரும்—ஒக்கும், நொச்சிமதில் ஒருபொருட்பன்மொழி. உருக்கள் சந்திரன்முன் புனலையுஞ் சூரியன்முன் தீயையுஞ் சிந்திப் புனலில் அறமாற்றுநரையும், எரிவாய்த் தவ நோன்புழப்பவரையும் பொரும் என முடிக்க.

கொங்கு விரிந்த நறுங்க மலங்கள் கொழிக்கு மதுப்புனலாக்
குவிதர வூழ்த்துதிர் தண்ணிய தாது குவிக்கு மெருக்குவையாப்
பங்க நிரந்த வயற்கண் விளைந்து பழுத்தெழு நெற்குலை போய்ப்
பசும்புர வித்திரள் பூட்டிய தேரிற் பரிதிக் கடவுள்புடைப்
பொங்கொளி வெண்கவ ரித்தொகை வீசுவ போல வொசிந்தசையும்
பொற்பு மிகுங்கம லாகர மேவிய பூரணி மெய்யடியார்
தங்கள் பணிக்கென வெம்மை யளித்தவ டாலோ தாலேலோ
தகரக் குழலா யமுதப் பிடியே தாலோ தாலேலோ. (7)

(7) கொங்கு—மணம். குவிதர—நிறைய. ஊழ்த்து—பதனழிந்து தாது—மகரந்தம். பங்கம்—சேறு. ஒசிந்து—துவண்டு. கமலாகரம்— குளத்தூர். தகரம்—மயிர்ச்சாந்து.

பவளக் கொடிபடர் வேலை முகட்டிற் பாயொளி கான்றெழுசெம்
பரிதி நிகர்ப்பச் செம்மணி மாலை பரப்பிய மைக்குழன்மேற்
றிவளக் கதிர்விடு கொண்டை திருத்திச் செஞ்சுடர் வாண்மகரத்
திருவணி யக்கடன் மகர மெனத்தனி செருகிப் பகைஞருளர்

துவளச் சிலைபடு கணையென நுதலிற் சுட்டி தரித்தருகிற்
சுடர்பிர தாப மெனப்பொட் டெழுதித் துன்னிய கீர்த்தியெனத்
தவளப் பணிமுக் கிட்டொளிர் பாவாய் தாலோ தாலேலோ
தகரக் குழலா யமுதப் பிடியே தாலோ தாலேலோ. (8)

(8) வேலை–கடல். திவள–விளங்க. மகரத்திருவணி–மகரமீன்வடிவமாகச்செய்த திருவாபரணம். கொண்டை–ஐம்பாலினொன்று. மகரத்திருவணி செருகியெனக் கூட்டுக. நுதலுக்குச் சிலையும், சுட்டிக்குக் கணையும் உபமானமாகக் கொள்க. பொட்டு–சிந்தூரப்பொட்டென்க. தவளப்பணி–வெண்ணிறமுள்ள முத்தணியென்க. பிரதாபத்திற்கு நிறம் செம்மையும், கீர்த்திக்கு நிறம் வெண்மையுமாகக்கூறலாற் பொட்டிற்குப் பிரதாபமும், தவளப்பணிக்குக் கீர்த்தியு முவமானமாகக்கூறினு ரென்க.

வேறு.

பரந்த வெண்புணரி மீதோன் வேதா மாதேவர்
பணிந்து தொண்டுசெய வேலே சேலே போலாடுங்
கருங்க ணுந்துமளி யீவாய் பாவாய் தாவாது
கறங்கு வண்டளக மானே தேனே யேனோர்தம்
புரங்க டந்தநகை வாயார் தூயார் சேயார்பாற்
புணர்ந்தி டும்பசிய தோகாய் காவாய் நீகாவென்
றிரங்கு மன்பரக வாழ்வே தாலோ தாலேலோ
இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ. (9)

(9) வெண்புணரியென்றது பாற்கடலை. அளி–அருள். தாவாது–வருந்தாது. புரங்கடந்த–திரிபுரத்தைச்செயித்த. சேயார்–செந்நிறத்தவர். இலம்–இல்லம். குளந்தை–குளந்தாபுரி.

மலங்க டங்குமரு ளூராய் தாலோ தாலேலோ
மலங்க டங்குமரு ளூராய் தாலோ தாலேலோ
கலங்க லந்தவரை யேயாய் தாலோ தாலேலோ
கலங்க லந்தவரை யேயாய் தாலோ தாலேலோ
புலங்க டந்தபர நாடாய் தாலோ தாலேலோ
புலங்க டந்தபர நாடாய் தாலோ தாலேலோ
இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ
இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ. (10)

(10) மலங்கு அடங்கும் அருள் ஊராய்—மலங்குதல் குறையும் அருளுக் கிடமாயிருப்பவளே. மலங்கு முதனிலைத்தொழிற்பெயர். மலங்கல்—கலங்கல். மலங்கள் தங்கும் மருள் ஊராய்—மும்மலங்கள் தங்கு மயக்கஞ் செல்லாதவளே. ஊர்தல்—செல்லுதல். கலம் கலந்த அரை எய் ஆய்—(மேகலையாகிய) ஆபரணம் பொருந்திய இடையையுடைய தாயே. கலங்கு அலந்தவரை எயாய்-(அறிவு)கலங் குகின்ற துன்பமுற்றவரைச் சாராதவளே. அலந்தவர்—துன்பமுற்றவர். புலம் கடந்த பரம் நாடாய்—எல்லாத்தேயங்களையுங் கடந்துநின்ற முத்திநாட்டையுடை யவளே. பரம்—மோக்கம். புலங்கள் தந்து அபரம் நாடாய்—அன்பர்க்கு அறிவு களை யருளி யவ்வருளுதலிற் பின்னிடுதலை நாடாதவளே. அபரம்—பின். பர ஞானம் அபரஞானமென ஞான மிரண்டாதலாற் புலங்களெனப் பன்மையாற் கூறினர். இலங்கு உளம் தைவரு தாளாய்—(அறிவு) விளங்குகின்ற அன்ப ருள்ளத்திற் பொருந்துகின்ற பாதத்தையுடையவளே. தைவரல்—தடவுதல்; ஈண்டுப் பொருந்துதலெனக் கொள்க. இலம் குளந்தை வரு தாளாய்—குளந்தைப் பதி இல்லமாக வருகின்ற முயற்சியையுடையவளே. தாள்—முயற்சி.

தாலப்பருவமுற்றிற்று.

---

நான்காவது

## சப்பாணிப்பருவம்.

இப்பருவம், குழவி கையொடு கைபொருந்தக் கொட்டும்படி கூறும்பருவ மாம். பாணி—கை.

உருப்பொலி மணிப்புன லுடுக்கைப் புவிக்கொடி
யுரத்திற் குலாவுமாக்கள்
உருத்தொன்றை யாற்றினெதிர் பத்தாற்று வோமெனு
முரைக்கிலக் கியமாகவொண்
குருப்பொலி விரற்செறி செறித்துப்பொலங் தொடிகள்
கொழுவித் தனைப்பரிவினுற்
கொண்டாடு நின்றிருத் தாதைகிளை யொன்றைக்
குழைத்துப் பணித்தவிறைவன்
திருப்பொலி கடுக்கைதழை தோட்குவடு பத்தையுஞ்
செழுந்தழும் பாக்குழைத்துத்
திறல்கொண்ட நறுமலர்க் காந்தளங் கைத்தலஞ்
சேந்தழ கெறிப்பவிமையோர்

தருப்பொலி மலர்த்தொடைக் கூந்தலமு தாம்பிகை
சப்பாணி கொட்டி யருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை
சப்பாணி கொட்டி யருளே. (1)

(1) உடுக்கை – உடை. "நீ ஒன்றுசெய்தாற்பத்துச்செய்வே" னென்பது பழமொழி. குரு–நிறம். விரற்செறி–விரலிற்செறிப்பதாகிய (மோதிரம்). பொலந்தொடி – பொன்வளையல். தாதைகிளையென்றது–இமய மலையின்சுற்றமாகிய மேருமலையை. குழைத்து–வில்லாகக் குழைவுசெய்து. தோட்குவடு–புயமலை. தழும்பாக்குழைத்த காலம், காஞ்சியிற் கம்பாநதியிற் பூசைசெய்த காலம். சேந்து–சிவந்து.

உள்ளொளி ததும்பிமேற் பொங்கிப் புறத்தினு
முவட்டெடுத் துப்பாந்தாங்
கொழுகொளிய வெண்ணீறு மெய்ம்முழுது மட்டித்
துயர்ந்தவடி யார்கள்குழுமி
வெள்ளொளியி னுனுஞ் சிவத்துதி முழக்கானும்
வேங்கைமக வுக்களித்த
விதிவச நினைந்தின்னும் வேண்டுவார்க் கருளாமை
வேண்டுது மெனுங்கருத்தாற்
றெள்ளுதீம் பாற்கடல் வளைந்தெனச் சூழ்போந்து
சேர்ந்தனர் நெருங்குபொதியிற்
றெய்வத் திருக்கேள்வ ராட்டினுக் கேற்குந்
திருத்தாள மென்னமலரைத்
தள்ளியெழில் பூத்தநின் செங்கைத் தலங்கொண்டோர்
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை
சப்பாணி கொட்டியருளே. (2)

(2) உள்ளொளி–உள்ளிருக்கும் ஞானவொளி. மட்டித்து–பூசி. வேங்கை மகவு–புலிக்கான்முனிவர்பிள்ளையாகிய உபமன்னியர்.

வேங்கைமகவுக்களித்த கதையாவது–முன்னொருகாலத்தில் உபமன்னிய முனிவர் குழவிப்பருவமுற்றிருக்கும்போது பொன்னம்பலத்திற்சென்று நடராசரை நோக்கிப் பால்வேண்டி அழ, அப்போது நடராசர் பாற்கடலை வரவழைத்

திக் கொடுத்தருளினு ரென்பதாம். இக்கதையின் விரிவைக் கோயிற்புராணம் வியாக்கிரபாதச்சருக்கத்திற் காண்க. வேண்டுதும்-வேண்டிக்கொள்வோம். பொதியில்-அம்பலத்தில். கேள்வர்-நாயகராகிய நடேசர். வெண்ணீற்றடியார்கள் குழுமிய வெள்ளொளியானும், சிவத்துதி முழக்கானும், பாற்கடல் வளைந்ததெனச், சேர்ந்தனர் நெருங்கு பொதியில் எனக் கூட்டிக்கொள்க. சேந்தனர் எச்சமுற்று.

ஐவகைச் சுத்தியு மமைத்துவான் கம்பைநதி
யருகன்பு பூப்பமலரால்
அஞ்சலி நிறைத்துமே னேக்கிமுக மதியினெதி
ரல்கிய தெனக்குவிந்து
மெய்வகைத் துவாதசாந் தத்தலத் தானந்த
வெள்ளப் பெருஞ்சோதியை
விரிமலர்த் தவிசாக வேற்றுமுன் போலென்ன
மீண்டுங் குவிந்திழிந்தாங்
குய்வகைச் சிவலிங்க நாப்பணு வாகித்தவ்
வும்பனய னச்சுடரெதிர்
உறக்குவிந் தலர்விரைவு மானமுத் திரைகொடுத்
திலவாது பூசைமுற்றுஞ்
சைவமுறை யாற்றுகைப் பங்கயஞ் சேப்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தாரம்மை
சப்பாணி கொட்டியருளே. (3)

(3) ஐவகைச்சுத்தியுமமைத்து-முதலிலே, ஐந்துவிதச் சுத்திகளையமைத்து வைத்துக்கொண்டு. ஐவகைச் சுத்தியாவன—பூதசுத்தி, தானசுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தியென்பனவாம். இவற்றின் விவரத்தைத் தமிழ்ச்சொல்லகராதியிற் பஞ்சசுத்தி யென்பதிற் காண்க. அல்குதல்-சுருங்கல். துவாதசாந்தத்தலம்-சிரசின்மேற் பன்னிரண்டங்குலங்கடந்த வெல்லை. ஆவாகித்து-மூலமந்திரத்தால் ஆவாகனஞ்செய்து. அவ்வும்பன்-அச்சிவலிங்கப் பெருமானுகிய தேவன். சுடர்-சந்திரசூரியர். மான-ஒப்ப. முத்திரைகொடுத்து-ஆவாகனஞ்செய்தபின் முத்திரைகள் கொடுத்து. குவிதலுக்குத் தேன்முத்திரையும், விரிதலுக்கு மகாமுத்திரையுங்கொள்க. அமைத்து, நிறைத்து, மேனேக்கி, குவிந்து, ஏற்று, குவிந்திழிந்து, ஆவாகித்து, கொடுத்து, ஆற்று, பங்கயம் எனக்கூட்டுக. சேப்ப-சிவப்ப. ஆங்கு-அசை. இக்கவியின் கருத்தைச் சிவபூசை செய்வார்பாற் கேட்டுணர்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

கடவுட் பொலம்பூமி காண்டற் கெழுந்தெனக்
கடையுகப் பெருவெள்ளநீர்க்
கடன்மிசை மிதந்திட்ட பூந்தராய் தழையவரு
கௌணியர்கள் குலமணிக்கு
முடவுப் பிறைக்கண்ணி மோலிப் பிரான்சைவ
முறைநெறிச் சோகாப்பவன்
மூடப் புறச்சமய முழுவதுஞ் சோகாப்ப
மூண்டசிலை யோடுபுல்லும்
அடவிக் களிக்குந் தமிழ்க்குரிசி னீறிட
வமண்கைய ருண்ணீறிட
அருண்மடை திறந்தூற்று திருமுலைப் பால்கறந்
தமிழ்தஞா னங்குழைத்துத்
தடவுப்பொன் வள்ளத்து வைத்தூட்டு செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை
சப்பாணி கொட்டியருளே. (4)

(4) பூந்தராய்—சிகாழி. கௌணியர்குலமணி என்றது திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை. மோலி—மௌலி. சைவமுறைநெறியாகிய சோவைக்காப்ப என்க. சோ—அரண். முழுவதுஞ்சோகாப்ப—யாவுந் துன்புற. சோகாத்தல்—துன்புறுதல். சிலை—விற்கொடி. புல்—புலிக்கொடி. அடவிக்களித்தல்—காட்டிற்குக் கொடுத்தல். சிலைவில்லிரண்டையுமடவிக்களித்தலாவது அவ்விருகொடியையுமுடைய சேரசோழரை வென்று, அவர்களை நாட்டைவிட்டுக் காட்டிற் போகச் செய்தல் என்பது கருத்து. கையர்—கீழோர். தடவு—பெருமை. குலமணிக்கு ஊட்டு செங்கை யெனக் கூட்டுக.

தீங்கனிக் கிளவியால் யான்றவக் கோட்டிய
செழுங்கழையு முகமூரனீள்
சேயரிக் கண்ணன் மெலித்தவர விந்தமுந்
தேங்கமழு நறுமுல்லையும்
பூங்குவளை மலருங் கதிர்த்தபொன் மேனியிற்
போரிட் டொழித்ததளிர்கள்
பொங்கியொளிர் மாழையும் பிண்டியுஞ் சோகாந்து
போதுவன வற்றையணியா

ஏங்குகட லுலகமுத லெல்லாம் பணித்திடு
மிருஞ்சமர்த் திண்மையுதவி
யிடையாத வில்லென்று மம்பென்றும் வைத்ததென்
னென்றுநீ யொன்றொடொன்றைத்
தாங்கொளித் ததும்பிடத் தாக்கியாங் கங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை
சப்பாணி கொட்டியருளே. (5)

(5) தவக்கோட்டிய—மிகக் கோணலாகவளைத்த. கழை—கரும்பு. மெலித்த-மெலியச்செய்த. முகத்தான்மெலிவித்த அரவிந்தமும், மூரலான்மெலிவித்த முல்லையும், கண்ணன்மெலிவித்த குவளையுமெனக் கூட்டுக. தளிர் பொங்கியெழு பிண்டியுமெனக் கூட்டிக்கொள்க. மூரல்—பல். மாழை—மா. பிண்டி—அசோகு. சோகாந்து—துன்புற்று. அணையா—சேர்த்து. வில்லென்றும்—கழையை வில் லென்றும். அம்பென்றும்—அரவிந்த முதலியவற்றை அம்பென்றும். உதவி—அவைகட்குக்கொடுத்து. ஒன்றொடொன்றை—ஒருகையோடொருகையை. அம்பிகைகரங்களிலே கருப்புவில்லும் பஞ்சபாணமு முண்மையா லிவ்வாறு கூறினர். தணிகைப்புராணம் கடவுள்வாழ்த்து 2-ஆவது கவியிலறிக.

வேறு.

தவப்பய னைத்தொழு வார்க்கருள் செய்ய தடக்கையி னேற்றுபொலந்
தடவுத் தொடியிற் செறியு மணிக்கட் டத்திப் பாய்ந்திடுநின்
சிவக்கு மரிக்க ணிழற்று நிழற்றுணை செவ்விய நவ்விமறிச்
சீர்செய னேக்கி மகிழ்ந்துற வாடச் சேர்க்குது மென்றுமனம்
உவப்ப வுவப்ப மறிந்து மறிந்து முறக்க வவிக்கவவி
உயிர்த்து வளர்த்தருள் கூர்திரு மேனி யுளங்குளி ரச்சுழலும்
குவைக்கவின் மொய்த்த தளிர்க்கையி னம்பிகை கொட்டுக சப்பாணி
குளந்தை வயங்க வயங்கு மிளங்குயில் கொட்டுக சப்பாணி. (6)

(6) தொடி—வளையல். தத்தி—தாவி. நிழற்றுணை—கண்களினிழலாகிய இரண்டு சாயல்கள். நவ்விமறி—மான்கன்று. உறவாட—அந்த நவ்விமறிகள் ஒன்றோடொன்று சிநேகஞ்செய்துகொள்ள. மறிந்துமறிந்துமுறக்கவவிக்கவவி—மறுபடியு மறுபடியும்பொருந்த அகத்திட்டு அகத்திட்டு. கவவு—அகத்திடுதல். உயிர்த்து—பெற்று. சுழலல்—சுற்றல். கவவிக்கவவிக் கொட்டுகவென வியைக்க.

அரக்கெழில் கொண்டு கனிந்த செழுங்கனி யாகச் சேயொளியை
அள்ளி யிறைக்கு முருக்கலர் போலழ காரத ரத்தினையும்
சுரக்கு நறுஞ்சுவை வானமிழ் தேந்து சுடர்த்திரு வள்ளமெனத்
தூய மணித்தர ளத்தொடை பூண்டு துணைத்த தனத்தினையும்
பாக்கு நிறத்தளி ரென்று பசுங்கதிர் பம்பிய மேனியையும்
பார்த்துத் துய்த்திட வாயூ றுஞ்சிறு பச்சை யிளங்கிளிதன்
குருச்சிறை தைவரு மங்கையி னம்பிகை கொட்டுக சப்பாணி
குளந்தை வயங்க வயங்கு மிளங்குயில் கொட்டுக சப்பாணி. (7)

(7) கனியாக (நின்) அதரத்தினையும், அமிழ்தேந்து வள்ளமெனத் தனத்தினையும், தளிரென்று மேனியையும், பார்த்துத்துய்த்திட வாயூறுங் கிளிச்சிறை தைவருங் கையெனக் கூட்டுக. தைவரல்—தடவுதல்.

முழங்கு மிசைச்சிறை வண்டு விருந்துணு முண்டக நாண்மலர்கள்
மூரி மணித்தவி சாக வளர்ந்தருண் மூவிரு செவ்வுருவும்
தழங்கு குளங்கரை யெய்தி யெடுத்தெழி றங்கிடு மோருருவாத்
தழுவி முலைக்குவ டார வணைத்தெதிர் தாங்குத லாற்றகிலா
தழுங்கி விடுத்தொழி கங்கையுள் வெள்கி யலைந்து விளர்ப்பமுலை
அமிழ்த மருத்தி வளர்த்தருள் கூர்ந்தரு மைச்செய லாற்றியநின்
கொழுங்கவின் மொய்த்த செழுங்கையி னம்பிகை கொட்டுக சப்பாணி
குளந்தை வயங்க வயங்கு மிளங்குயில் கொட்டுக சப்பாணி. (8)

(8) மூவிருசெவ்வுருவும்—அறுமுகப்பெருமானுடைய ஆறு வி தச் சிறப்புள்ள வடிவும். தாங்குதலாற்றகிலாதழுங்கி விடுத்தொழி கங்கையுள்வெள்கி யலைந்துவிளர்ப்ப—(கைலையிற் சிவபிரான் கண்களால் வீழ்த்திய ஆறக்கினிப் பொறிகளை அக்கினியானவன் தாங்கிக்கொணர்ந்து விடுப்ப அவ்வாறக்கினிப் பொறிகளையுந்) தாங்குதலாற்றாதுவருந்திச் சரவணப்பொய்கையிலே விடுத்த கங்கையானவள் மனநாணியசைந் துடல்வெளுப்படைய எனப் பூர்வகதையுடனியைத்துரைக்க.

வேறு.

மதுகர முலவிய துளப வுரத்தினன் மட்டாரும்
மரைமலர் நிலவிய மறைமுனி பொற்றவி சிற்றேவர்
முதுமணி முடிகுனி தரவர சிற்பொலி புத்தேளும்
முதலிய வணைவரு முளரி நிகர்த்த கரத்தால்விண்

ணதிதரு புனலொடு தருமலர் நச்சி யிணைத்தாளின்
நவையறு விதிமுறை சொரிதர மிக்க குளத்தூர்வாழ்
இதமுறு பாசுக வடிவினள் கொட்டுக சப்பாணி
இமகிரி தரவரு முமையவள் கொட்டுக சப்பாணி. (9)

(9) மட்டு—தேன். மறைமுனி—பிரமன். குனிதர—வணங்க. தருமலர்—கற்பகத்தருமலர். நச்சி—விரும்பி. நவை—குற்றம்.

அருள்பெறு மடியவர் விழியளி சுற்று மணத்தேனே
அவனியி னிடையற மெவையும் வளர்த்த சுவைப்பாகே
திருமல ரமரர்கள் சொரிதரு பத்ம பதத்தாயே
தெளிமறை நெறியின ருளமொளிர் வித்த சுகப்பேறே
முருகவிழ் மதுவழி நறுமலர் மொய்த்த குழற்கோதாய்
முனிவரர் மறையவ ரடியர் பழிச்சு குளத்தூரின்
இருமையு முதவிடு மடமயில் கொட்டுக சப்பாணி
இமகிரி தரவரு முமையவள் கொட்டுக சப்பாணி. (10)

(10) அறமெவையும்—முப்பத்திரண்டறங்களையும். உளம் ஒளிர்வித்த—உள்ளத்தை ஞானமுதவிப் பிரகாசிக்கச்செய்த. முருகு—மணம். குழற்கோதை—ஒருபொருட்பன்மொழி. இருமை—இம்மைப்பயன் மறுமைப்பயனென்க.

சப்பாணிப்பருவமுற்றிற்று.

---

ஐந்தாவது

# முத்தப்பருவம்.

இப்பருவம், பிள்ளையை முத்தமிடும்படி கூறும்பருவமாம். முத்தம்—அதரம்.

பகைத்த புரிசை மூன்றுமொரு
பதத்தி னிறுத்துத் திருக்குளந்தைப்
பதியிற் கருணை பூத்தலர்ந்த
பரமா னந்தப் பெருவாழ்வை
நிகர்ப்பச் சிறுவெண் மதிகிடந்த
நெடுவா ணுதன்மேற் போர்ந்துலவி
நெறிக்கும் புருவச் சிலைகோட்டி
நெய்த்துப் பழுத்த கொலைவேல்போல்

வகுத்த மதர்க்கட். சரந்தொடுத்து
மணிமே கலைசூ ழல்குலந்தோர்
வாய்ப்ப வெளிக்கொண் டெமது மும்மை
மலச்சோ வழலப் புன்மூரல்
முகிழ்க்குந் தரளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முருகு விரியு நறுங்களப
முலையாய் முத்தந் தருகவே. (1)

(1) ஒருபதத்தின் இறுத்து—ஒருசமையத்திற் கெடுத்து. புருவச்சிலை கோட்டி - புருவமாகியவில்லைவளைத்து. நெய்த்து - நெய்த்தன்மைபொருந்தி. மும்மை மலம் சோ அழல—ஆணவம் கன்மம் மாயையென்னு மும்மலங்களாகிய அரண் அக்கினிபற்ற. மூரல்முகிழ்க்கும்—நகையரும்பும். நிகர்ப்ப மூரன் முகிழ்க்குமென வியையும்.

வளைத்த கருப்புச் சிலையெடுத்து
வனசக் கணையு மாங்கணையும்
வாசங் கமழு நறுநீல
மலர்ப்பூங் கணையு மசோகினிடைத்
தளைத்த நனைதாழ் கொடுங்கணையுந்
தழுவிக் கொணர்ந்தென் னெடுந்தொடுத்துச்
சகல புவனங் களும்பணிக்குந்
தண்ணங் குடையெங் குரிசிலைக்கண்
டிளைத்த வெரியாற் படப்பொருத
திருவார் குளந்தைச் சிவவாழ்வைச்
சிந்தை மருட்டிப் பணிப்பலெனத்
திறல்கொண் டெழுந்த தளவம்போன்
முளைத்த முறுவற் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முருகு விரியு நறுங்களப
முலையாய் முத்தந் தருகவே. (2)

(2) எம் குரிசிலை—எம்முடைய அரசனாகிய மன்மதனை. திளைத்த—நிறைந்த. பணிப்பல்—பணியச்செய்வோன், தளவம்—முல்லைப்பூ. முறுவல்-நகை,

பிதிரும் பொறிப்பொற் சிறைவிரித்துப்
பெருந்தேன் மடுத்துத் தாதளைந்து
பெடையோ டாடிக் களிபூத்துப்
பிறழா வகையின் னிசைபாடி
அதிரும் பலவண் டினமுழக்க
வலரும் பொகுட்டுத் தேங்கமல
வலர்க்குந் தனக்கும் பகைமையுற
வமைத்துக் குளத்தா ரமர்ந்தருளிக்
கதிரும் பெருமா னுளக்கமலந்
தனையு மலர்த்தி வயமாக்கிக்
கலப்பா னெழுந்தா லெனவதனக்
கலைவாண் மதியி னரும்புநிலா
முதிரும் பவளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முருகு விரியு நறுங்களப
முலையாய் முத்தந் தருகவே. (3)

(3) தனக்கு என்றது வதனமதியைக்குறித்த தென்க. கலப்பான்-சேரும் பொருட்டு. பெருமானென்றது சிவபிரானை. அரும்பு - தோன்றுகின்ற. நிலா-நகையாகிய நிலாவென்க.

கொழுது வரிவண் டினமுரலாக்
குளிர்பூந் தொடையன் முடிசாய்த்துக்
கும்பிட் டிறைஞ்சுங் கடவுளர்தங்
குழாத்தைச் சிறிது மதியாத
பழுது நிலவாத் திருக்குளத்தைப்
பதிவா ழிறையோன் விழிச்சுடரின்
பரிசு நோக்கி மணியிதழ்க்க
பாடஞ் சிறிதே திறந்துருவம்
எழுதும் வினைஞர் தொழிற்கடங்கா
வெழிலார் தனதொள் ளொளிகாட்டி
எழுந்தச் சுடரை வயமாக்கி
யேக்கற் றமையம் பார்த்திருப்ப

முழுது மடிமைக் கொளுநகைவாய்
முத்தந் தருக முத்தமே
முருகு விரியு நறுங்களப
முலையாய் முத்தந் தருகவே. (4)

(4) மணி இதழ் கபாடம் - அழகிய அதரமாகிய கதவு. உருவமெழுது வினைஞரென்றது சித்திரகாரரை. ஒளியை யெழுதுவதற்கு முடியாமையால் தொழிற்கடங்கா வொளியென்றார். அச்சுடரை - அந்தவிழிச்சுடரை. எக்கற்று- விரும்பித்தாழ்ந்துநின்று. அமையம் - சமையம்.

இகந்த மனத்தாற் கடல்கடைந்த
விமையோர் வெருவ வெழுங்காளம்
எடுத்துப் பருகுந் திருக்குளந்தை
யிறைவன் பவளத் திருவாய்க்கும்
சகந்த னிலைமை தவாதோங்கத்
தாவிக் குதிக்குஞ் சிறுமறிமான்
தழங்கு மரும்பே ரொலிமுழுதுந்
தாங்குஞ் செவிக்கு மருந்தாக
உகந்த வொளிதுன் றியவெயிற்றி
னூறு மமிழ்தப் பெருக்காறும்
உரைப்பா ணமிழ்தப் பெருக்காறு
மூட்டிக் களிகூர்ந் தெழிற்கடலை
முகந்த பவளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முருகு விரியு நறுங்களப
முலையாய் முத்தந் தருகவே. (5)

(5) இகந்தமனத்தால் - சிவபிரானைமதியாது நீங்கிய மனத்தினால். காளம்- விடம். சகந்தன்னிலைமைதவாதோங்க - மானொலியால், உலகந் தன்னிலைமை கெடாது உயர்ச்சியுற்றிருக்க வென்க. ஒங்கத் தாங்குஞ் செவியெனக்கூட்டுக. மான் - முனிவர்கள்விட்ட மானென்க. உரைப்பாணமிழ்தப் பெருக்காறும் - சொல்லிசையாகிய அமிழ்தவெள்ளநதியும். திருவாய்க்கு எயிற்றினூறு மமிழ்த மருந்தாகவும், திருச்செவிக்கு உரைப்பாணமிழ்த மருந்தாகவுங் கொள்க. செவிக்குமருந்தாக என்பதற்கு அம்மானொலியாலாகிய வருத்தமுற்ற செவிக்கு அவ்வருத்தநீங்க அச்செவிக் குதவுமருந்தாக என்பது கருத்தாகக்கொள்க,

வேறு.

அசும்புபட வாய்நீர் வழிந்தோட வோடிவந்
தணையுமைங் கரக்க ளிற்றை
ஆகத் திடைக்கொண்ட ளுப்பட் டடித்தென
வணைத்தலும் பணைத்து வளர்பொற்
றசும்புதனை யெதிருமிரு களிறெனத் தன்மத்
தகங்கொண்டு தாக்கி மயிரின்
றண்ணிய வொழுக்கினை யணைக்குமொரு கந்தெனத்
தடவுக்கை யாற்சு ழியவவ்
விசும்புண்மறை பட்டெழுந் தெண்ணிலா வெனநகை
விரித்தொல்லை மேலெ டுத்து
வெகுளிதீர்த் துளங்குழைய முத்தாடி வைத்தாடும்
வியனகர்க் குளந்தை வாழ்வே
பசும்பொனவிர் திருமேனி யழகொளிர நின்றுநின்
பனிவாயின் முத்த மருளே
பங்கயச் செல்விதொழு மங்கையர்க் கரசிநின்
பனிவாயின் முத்த மருளே. (6)

(6) அசும்பு - துளி. குழவிப்பருவத்தைக்குறித்தற்கு வாய்நீர் வழிந்தோட வென்றார். ஐங்கரக்களிறு—விநாயகர். ஆகம்—மார்பு. நாப்பண்—நடு. தடித்து—மின்னல். பணைத்து - பருத்து. தசும்பு - குடம். கந்து-கட்டுத்தறி. சுழிய—சுற்றிவளைக்க. விசும்பு—மேகம். ஒல்லை—விரைவு. வெகுளி—கோபம். முத்தாடி—முத்தமிட்டு. பச்சைநிறமுள்ள அம்பிகைமேனியைக் கொண்டலாகவும், செந்நிறமுள்ள விநாயகரை மின்னலாகவுங் கொள்க.

சேட்டின மணிச்சோதி நீட்டுமிலை ஞாங்கர்நுதி
தீட்டுநின் னாட்டத்தினுற்
றெள்ளிய வருட்பார்வை வெள்ளவமிழ் தம்மைநீ
தேக்கிடவு நீக்கியளகக்
காட்டினைக் காட்டிமயல் பூட்டிளம் பேட்டனக்
கவினடைக் கன்னியரிடைக்
கட்டுண்டு மட்டுண்டு தட்டுண்டு பட்டிறுந்
காளையரின் மாழுநரென

மூட்டியபொன் மாடகத் தியாழுக்கு மிசையூட்டு
மொழியமிழ்த மூட்டவிட்டு
மோட்டிருங் கோட்டுக் குவட்டைநிகர் வட்டமுலை
முத்தையமிழ் தென்றேக்கறூஉம்
பாட்டிசைக் கிள்ளைக்கு மீட்டுமிசை யூட்டுநின்
பனிவாயின் முத்தமருளே
பங்கயச் செல்விதொழு மங்கையர்க் கரசிநின்
பனிவாயின் முத்தமருளே. (7)

(7) சேட்டினமணி - பெருமையையுடைய கூட்டமான மணி. இலைஞாங்கர்—இலைபோலத் தகட்டுவடிவமாயிருக்கின்ற வேல். நுதி—நுனி. நாட்டம்—கண். தேக்கிட—நிறைத்திட. மட்டுண்டு—எல்லைக்குட்பட்டு. தட்டுண்டு—தடைபடுதல் பொருந்தி. பட்டிறுங்காளையரின் மாழ்குநரென—அறிவுகெட்டுமுறியுங் காளைப் பருவத்தருக்குள்ளே மயங்குநரைப்போல. இறுதல்—முரிதல். மாழ்குதல்—மயங்குதல். மாடகம் - முறுக்காணி. ஊட்டவிட்டு - (நீ அக்கிளிக்கு) ஊட்டுதல்செய்ய அதைவிடுத்து. மோடு - பெருமை. கோட்டுக்குவடு - சிகரத்தையுடைய மலை. ஏக்கறூஉம்-விரும்பிப்பெறத் தாழ்ந்துநிற்கும். அருட்பார்வையமிழ்தந் தேக்கிடவு நீக்கிக் கன்னியரிடை மாழுநரென மொழியமிழ்த மூட்டவிட்டு முலைமுத்தை அமிழ்தென்றேக்கறூஉங் கிள்ளையென முடிக்க.

மடல்கொண்ட பூந்துழாய்ப் படலைமணி மார்பினன்
மறைக்கிழவ னுதியண்ட
வாணரும் பதைபதைத் தோட்டெடுப் பக்கொடிய
வளைகடற் புனன்மீதெழும்
விடமுண்ட சோமேச னார்க்கினிய வாயமிழ்த
மெல்லெனப் பருகுவித்து
விளியாத வண்ணமென் கொங்கையஞ் சஞ்சீவி
வெற்புங் கொடுத்துமற்றும்
உடனென்றி மணிமிடற் றுலவா திருத்தலா
னொருகணப் பொழுதுமகலா
துருப்பாதி யிற்கலந் தனுதினம் பாதுகாத்
தொண்குளத் தூரின்மருவும்
படமொன்று மரவல்குலெழிலமுத வல்லிநின்
பனிவாயின் முத்தமருளே
பங்கயச் செல்விதொழு மங்கையர்க் கரசிநின்
பனிவாயின் முத்தமருளே. (8)

(8) படலை - மாலை. வாயமிழ்தம் - வாயூறனீராகிய வமிழ்தமென்க. பருகுவித்து - அவ்விடத்தின் றீமைகெடும்படி யுண்ணுவித்து. விளியாத - கெடாத. கொங்கையஞ்சஞ்சீவிவெற்பு-தனமாகிய அழகிய சஞ்சீவிமலை. சஞ்சீவி-உயிர்தரு மருந்து.

வேறு.

சுறவே றியகொடி முதலா கியபடை சுற்றி வரத்தனிபோய்ச்
சுவைநீள் சிலைகொடு மலரார் பகழி துரக்கு மதக்கொடுவேள்
இறவே நுதல்விழி வழியூ டழலெழு வித்த திறற்பெருமான்
எரிபோ லொளிவிடு சடைமா முடியி னிருக்கு மதிக்கடவுள்
வெறியார் திலகம தணிவா ணுதலெழி லிற்குளம் வட்கிநறு
விரிபூ விதழியை நடுமே னியினிறு விப்பொரு வக்கருதும்
முறிபோ லுருவினள் கமலா கரமயின் முத்த மளித்தருளே
முதுநான் மறையறி வறியா வடிவினண் முத்த மளித்தருளே. (9)

(9) சுறவு - மகரமீன். பகழி - பாணம். இற - கெட. திலகம்-சிந்தூரப் பொட்டென்க. வட்கி - நாணி. நிறுவி - நிறுத்தி. பொருவ - ஒப்பாயிருக்க. முறி - தளிர். மதிக்கடவுள் திலகநுதலெழிற்குளம் வட்கி இதழியை நடுமேனியி னிறுவிப் பொருவக் கருதுமென்க.

பெருகா ரமிழ்தரு ளொளிசேர் மதியெழில் பெற்ற நுதற்கொடியே
பிறவா வருணெறி தருவா யெனுமவர் பெட்பி னுளச்சுவையே
மருவார் தகரமு மளிவீழ் மலரு மணத்த குழற்றிருவே
மதியா தவருள மருவா திருளென வைத்த மடப்பிடியே
உருகா நெறியெம துளமா சறவு மொறுக்கு மறக்கடலே
உருவா யளவரு மருவாய் நிறைபொரு ளுக்கொரு வைப்பிடமே
முருகார் பொழிலணி கமலா கரமயின் முத்த மளித்தருளே
முதுநான் மறையறி வறியா வடிவினண் முத்த மளித்தருளே. (10)

(10) பெட்பு - அன்பு. தகரம்-மயிர்ச்சாந்து. உளத்தையிருளெனவைத்தலாவது - அஞ்ஞானமயமாக வைத்தலென்க. பொருளென்றது சிவபிரானை. வைப்பிடம்—வைத்தற்குரிய இடம்.

முத்தப்பருவமுற்றிற்று.

---

ஆறுவது

# வாரானைப்பருவம்.

—⊱(o)⊰—

இப்பருவம், தாதியர்கள் பிள்ளை நடந்துவருதலை விரும்பியழைக்கும் பருவமாம். வாரானை - வருதல், ஆனை - தொழிற்பெயர்விகுதி.

வெள்ளித் தகட்டையரில் கொள்ளத் துறுத்தனைய
வெள்ளிய சிறைப்பவளவாய்
வெள்ளோதி மத்திரள்கள் செஞ்சிலம் பொலியினையு
மென்மடப் பிடியினத்தை
எள்ளிக் கவின்கொண்ட திருநடைப் பொலிவினையு
மெய்யாது கற்கவெண்ணி
இகபரப் பெருவாழ்வு வேட்டவர்க் கருளுநின்
னிணையடிக் கமலமலரை
உள்ளித் தொடர்ந்துசூழ் மொய்த்திடுஞ் சூழலிடை
யுற்றுநீ யச்சுழலி
னெடும்பெயர்ந் தவிர்மதிய மூர்ந்துவர லேய்ப்பவொளி
மாமணிக ளிருகரையினும்
அள்ளிச் சொரிந்துலவு பாலிநா டாளவரு
மமுதாம்பி கைவருகவே
அருண்மடை திறந்தூற்று புன்மூர லழகொளிர
வம்பொனு யகிவருகவே. (1)

(1) அரில் - பின்னுதல். துறுத்தல் - நெருக்கிவைத்தல். எய்யாது-மூன்பு அடையாது, பெறாது. கற்க - அவ்வொலியையும் நடையையுங் கற்றுக்கொள்ள. சூழல்—கூட்டம், ஏய்ப்ப—ஒப்ப. மதியமூர்ந்துவரலேய்ப்ப வொளிமாமணிக ளிருகரையினு மள்ளிச்சொரிந்துவரு பாலியென்க. பாலி—பாலாறு. மணியென்றது முத்தை. பாலிநாடு—பாலாற்றையுடைய தொண்டைநாடு. புன்மூரல்—சிறுநகை.

துளிபட்ட தேந்தொடைக் கூந்தலைக் காரென்று
தோகைமுன் னோடிவரமென்
றுணைமலர்ப் பாதநடை கற்கவன் னத்திர
டொடர்ந்துபின் னேடிவரவுட்

களிபட்ட தீங்கிளவி கற்குநின் செந்தளிர்க்
கைக்கிள்ளை பாடிவரமான்
கருணைபொழி கட்கடைப் பார்வையை வியந்துமான்
கன்றினங் கூடிவரமெய்
யொளிபட்ட வேதக் குழாங்கதறி யோலிட்
டுனைப்பெரிது நேடிவாவில்
லுமிழ்மணிக் கோவைக் குரூஉப்பருமமீமிசை
யுடுத்தவிடை வாடிவரமை
அளிபட்ட பூஞ்சோலை சூழ்குளத் தூரில்வரு
மமுதாம்பி கைவருகவே
அருண்மடை திறந்தூற்று புன்மூர லமுகொளிர
வம்பொனு யகிவருகவே. (2)

(2) தோகை - மயில். மெய்யொளி - உண்மைஞானவொளியென்க. ஒல்-ஒலி. நேடி-தேடி. வில்-ஒளி. குரூஉ-நிறம். பருமம்-பதினறுகோவைமணி வடம். மீமிசை - மேல் எனப்பொருள்கொள்க. வாடுதல்-ஈண்டுத்துவளல். அளி-வண்டு.

வில்லுமிழ் குரூஉமணிச் சுடிகைப் பணிக்குழாம்
விரித்தபை நெரித்துருத்து
வீசுங் கலாபப் பசுந்தோகை யீட்டங்கண்
மெல்லியலு நடையும்வேட்டு
வல்லுறழ் மணிக்கோவை தாழ்ந்தமென் கொங்கைநின்
மருங்குறச் சூழ்ந்துவரவவ்
வளரிளஞ் சாயலா னடையினுன் வேறறிய
மாட்டாது மருளுமெம்மை
எல்லொளித் தண்ணிலா நகைகொண்டு தேற்றிமற்
றிருக்காதி யானநான்கும்
இன்னங் கிடந்துமுறை யிட்டுமறி வரியநின்
னியல்பினைக் காட்டியருளி
அல்லுமிழ் தடம்பொங்கர் சூழ்குளத் தூரில்வரு
மமுதாம்பி கைவருகவே
அருண்மடை திறந்தூற்று புன்மூர லமுகொளிர
வம்பொனு யகிவருகவே. (3)

(3) சுடிகை-உச்சி. பை-படம். ஈட்டம்-கூட்டம். இயல்-சாயல். வல்-சூதாடுகருவி. வேறு அறியமாட்டாது-(இது மயிலுருவமென்றும் நின்னுடைய வுருவமென்றும்) பேதமறியமுடியாமல். தேற்றி-(மயக்கநீங்கத்) தெளிவித்து.

வயிரா வணந்தொறு மெழுங்குளத் தூர்வந்து
வான்கோடி ரண்டாயிரம்
வாய்த்ததனை யாளும் பிரானைமரு மத்திரு
மருப்பினு லாளாண்மையும்
செயிரா வணங்கினைப் பல்லுயிரு மெய்தத்
தெறூஉமலக் களிறைந்தையும்
திக்கெட்டு மண்டப் பரப்புங் கடந்திறச்
செற்றிடும் விழிவீரமும்
பயிரா வணஞ்சொரியு மேகத்தி னருள்கூர்ந்த
பதநடையு நோக்கியஞ்சிப்
பனிமா லடுக்கலெனு நுந்தைநின் னுரிமையாற்
பரிந்துபின் வருதலேய்ப்ப
அயிரா வணம்பின்பு தொடரத் தொடைக்கூந்த
லமுதாம்பி கைவருகவே
அருண்மடை திறந்தூற்று புன்மூர லழகொளிர
வம்பொனூ யகிவருகவே. (4)

(4) வயிர்-ஊதுகொம்பு. ஆவணம்-வீதி. கைலையிலிருக்கின்ற அயிராவணத்திற்கு இரண்டாயிரங்கொம்புண்டெனக் கொள்க. மருமத்து இரு மருப்பினுல்-மார்பிலிருக்கின்ற தனங்களாகிய இரண்டுகொம்பினுல். செயிரா-செயிர்த்து. அணங்கினை-தெய்வத்தன்மையை. தெறூஉம்-அழிக்கும். மலம் களிறு ஐந்து-ஆணவம், கன்மம், மாயை, திரோதானம், மாயேயம் என்னும் யானைகள் ஐந்து. பயிர் ஆவணம் - பயிர்கள் அபிவிருத்தியாகும்படி. அயிராவணத்துக்கு நிறம் வெள்ளையாதலாற் பனிமலை பின்வருதலேய்ப்பவென உவமைகூறினர். ஆண்மையும், வீரமும், நடையுநோக்கி என இயைத்துரைக்க.

விந்தையங் கிரிதனக் கிகலியுள் ளதுமுற்றும்
வீந்தவீ றின்மையுந்தண்
வெள்ளிவே தண்டமொ ரரக்கன் பெயர்த்திட்ட
மென்மையுங் ககனமீறும்
மந்தர முதற்கிரி யிடைக்கட் பொலிந்தண்ட
மார்க்கத் திரண்டுசுடரும்
வலமாய் வரப்புவிக் காதார மானதன்
வன்மையையு நோக்கிநோக்கிச்

சிந்தைகளி கூருமா மேருவைச் சிவபிரான்
செங்கமல வங்கைபத்துஞ்
சேர்ந்து நித்தலுமுழக் கத்தளர்ந் தொசியாது
செம்மாந்து விம்மியெள்ளும்
அந்தனச் சிகரிமிசை யருவிநித் திலமிட்ட
வமுதாம்பி கைவருகவே
அருண்மடை திறந்தூற்று புன்மூர லழகொளிர
வம்பொனு யகிவருகவே. (5)

(5) வேதண்டம்-மலை. அரக்கனென்றது இராவணனை. ககனம்-ஆகாயம். அண்டமார்க்கம்-ஆகாயநெறி. உழக்க-கலக்க. ஒசியாது செம்மாந்து விம்மி-துவளாது இறுமாந்து பருத்து. எள்ளல்-இகழல். வீறின்மையும், மென்மையும், வன்மையுநோக்கிக் களிகூரு மேருவை எள்ளுந் தனச்சிகரி யெனக்கூட்டுக. நித்திலம்-முத்துமாலையென்க.

வேறு.

தெய்வச் சுருதி தமிழ்க்கன்றித் தீட்டா நிலைமைத் தெனவுலகிற்
றெறிக்குங் காழித் திருஞானச் செம்மற் குழவிக் கருண்ஞானம்
பெய்து குழைக்க வோமுலையாம் பெரிய மலைவா யுறுத்துமென்றோ
பெருமான் றனையுங் குழைத்தவலிப் பெற்றி யறிந்து தடுத்தோபூங்
கையி விலகு நகக்குறிபற் கதுவ நோமென் றோதீம்பால்
கறந்து கொடுத்தா யெனச்சகிமார் கனிந்து பாட நகைமுகிழ்க்கும்
வைவைத் தமைத்த மதர்வேற்கண் வாழ்வே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே. (6)

(6) செம்மற்குழவிக்கு - புத்திரனாகிய பிள்ளைக்கு. குழைத்தவலி - (கம்பாநதியிற் பூசிக்குங்காற் றழுவிக்) குழைவுசெய்த வலியென்க. வை-கூர்மை. திருமுலைப்பாலினோடு ஞானமுங் குழைத்துக்கொடுத்த கதை திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணத்தி லறிக.

குஞ்சி யசைய வசைந்துவருங் குமாரப் பெருமான் றனையேந்துங்
குளிர்பூங் கரத்துத் தொடிகறங்கக் கொடிபோ லொசியுஞ் சிறுமருங்
அஞ்சி நுடங்க வம்மருங்கு லணிந்த பருமங் கதிர்த்தேங்க [குல்
அணங்கு மிடைகண் டிரங்குவபோ லவிரு மணிநூ புரமொலிப்பப்

பஞ்சி திருத்துஞ் சீறடிகள் பதிந்த சுவடு தொறுமிமையோர்
பனிகான் மோலி நிரைபுரளப் பதுமை முதலோர் களிதூங்க
மஞ்சி வரும்பூங் குழற்கற்றை மாதே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே. (7)

(7) குஞ்சி-குடுமி. கறங்க-ஒலிக்க. நுடங்க-அசைய. ஏங்க - ஒலிக்க. சுவடு-(காலழுந்தியிருந்த) தழும்பு. தூங்க-தங்க. மஞ்சு இவரும்-மேகம்விரும்பும். கறங்க, நுடங்க, ஏங்க, ஒலிப்ப, புரள, தூங்க, வருக வெனமுடிக்க. சுவடுதோறு மிமையோர் மோலிபுரளலாவது பாதச்சுவடு காணப்பெற்ற மகிழ்ச்சியாற் பன் முறை வணங்கலென்க.

கடிகொண் டலரு நறுங்கடுக்கைக் கடவுள் மகிழப் பேரண்ட
கடாகப் பரப்பே சிற்றிலெனக் கருமப் பகுப்பே சிறுசோறும்
படிகொண் டுயிராம் பாவைகட்குப் பைதன் மலநோய்ப் பசியிரியப்
பல்கா லயிற்றி விளையாடிப் பரமா னந்தப் பெருவீட்டிற்
குடிகொண் டிருக்குந் தீங்கரும்பே கொள்ளத் தெவிட்டாச் சுவையமுதே
குன்றம் பயந்த நறுங்கனியே கொழிக்குங் கருணைப் பெருக்காறே
மடிகொண் டயரா தெமைப்புரக்கும் வாழ்வே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே. (8)

(8) பைதல்-துன்பம். மலம் நோய் பசி இரிய-ஆணவமலநோயாகிய பசி கெட. அயிற்றி-ஊட்டி. தெவிட்டல்-நிறைதல். மடி-நோய். அயராது-சோர்வை யடையாமல்.

தீது விளக்குங் களப்பணியுந் தேவர் குரவன் மனைச்செல்வி
திருக்கற் பளித்த களப்பணியுந் திளைத்துக் கலவி செயப்புகுங்காற்
கோது விளக்கும் பேரச்சக் குணமு நாணுங் கொடுக்குமெனக்
குறியே னினது சாயலுமின் கொழிக்குங் காஞ்சி யல்குலுமே
போது விளக்குஞ் சடைக்காட்டிற் புகுந்து வெளிக்கொ ளாதொளிக்கப்
பொலிவு தருமா லெனச்சகிமார் புகலச் சற்றே நகைத்தளிகள்
வாது விளக்கு முடிசாய்க்கு மாதே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே. (9)

(9) களம் பணி-முன்னது, விடத்தையுடைய பாம்பு, பின்னது, கறுப்பை யுடைய அணியாகிய சந்திரன். திளைத்தல்-நெருங்கல். கோது-குற்றம். பாம்பால் அச்சக்குணமும், சந்திரனல் நாணமும், சாயலாற் பாம்பொளிக்க வெனவும், அல்குலாற் சந்திரனொளிக்கவெனவுங் கொள்க, வாது-கலகம்.

அயில்கண் டனையஞ் சலித்தேத்து மன்னை வருக பெருங்கருணை
யாழி வருக தீவினையே மாவித் துணையே வருகவிடந்
துயில்கண் டனையம் பலத்தாட்டுஞ் சுடர்பொற் கொடியே வருகவிளஞ்
சுகமே வருக நறுங்குதலை தோற்றுங் கிளவி யெனுமதுரம்
பயில்கண் டனையர் செவிக்கூட்டும் பசுங்கோ கிலமே வருகவென்றும்
பருகத் தெவிட்டாச் சுவையமுதப் பாவாய் வருக பசுந்தோகை
மயில்கண் டனைய விளஞ்சாயன் மாதே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே. (10)

(10) அயில் கண்தனை எனப் பிரித்துரைக்க. ஆழி - கடல். அம்பலத் தாட்டுதல் செங்கீரைப்பருவம் ௬-ஆவது கவியுரையிலறிக. குதலை - பொருள் விளங்காவுரை. கிளவியெனுங்கண்டு எனக்கூட்டுக. கண்டு-கற்கண்டு. அனையர்- அன்னையர். மயில்கண்டனைய - மயிலைக்கண்டாலொத்த.

வாரானைப்பருவமுற்றிற்று.

---

ஏழாவது

# அம்புலிப்பருவம்.

இப்பருவம், பிள்ளையை மங்கையரொக்கலையில் வைத்துக்கொண்டு அப் பிள்ளையுடன் சந்திரனை விளையாடவாவென்று சாம பேத தான தண்ட முறைகூறி யழைக்கும் பருவமாம். சாமம்-இனிதாகக்கூறல், சமமாகக்கூறல். பேதம்-ஒவ் வாமை, வேற்றுமைகூறல். தானம்-ஈகைகூறல். தண்டம்-ஒழுக்கத்தினும் வழக் கத்தினுந் திறம்பினாரை அவற்றின்வழியே நிறுத்தத் தண்டித்தலைக்கூறல். சாம முதலிய மூன்றினு மியையாதவரைத் தண்டித்தலெனவுங் கூறுவர்.

பொன்பூத் தலர்ந்தவன மரவங்கண் மாலரி
பொருங்களிற் றினமளாவிப்
பொங்குமலை வாய்வருங் காரணத் தாற்செய்ய
பொன்னஞ் சிலம்படியினின்
மின்பூத்து நாளும் புலம்புறச் சூழ்தலான்
மிடையுமங் கமலமயரா
மிக்குறுங் குவலய மடங்கலுங் களிதூங்க
விரியொளிக் கதிர்வீசலாற்

கொன்பூத்த பெருமானை யணைதலால் வேளெனுங்
குழகற்கு மகிழ்செய்தலாற்
கோமளப் பெண்செய்கை நின்செய்கை போலுமாற்
கூர்ந்துணரி னிவளையன்றி
அன்பூற் றெடுப்பவிளை யாடுதுணை வேறில்லை
யம்புலீ யாடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட
னம்புலீ யாடவாவே. (1)

(1) அம்பிலகையைக் குறிக்கும்போது, பொன்-பொற்கட்டி. வனம் மரவங்கள்-மிகுதியாகிய குங்குமமரங்கள். மால் அரி-பெரியசிங்கம். களிறு இனம்-யானைக்கூட்டம். மலைவாய்-இமையமலையிடத்தில். பொன் அம் சிலம்பு-பொன்னாற்செய்த அழகி சிலம்புகள். சிலம்பு-காலணி. அடி-பாதம். புலம்பு உற சூழ்தல்-ஒலித்தலுற வளைந்திருத்தல். மிடையும் அங்கம் மலம் அயர (உயிர்களைச்) செறிந்திருக்குங் களங்கமாகிய ஆணவமலஞ் சோர்வடையவும். குவலயம்-பூமி. களிதூங்க-களிப்பிற்றங்கவும். ஒளிக்கதிர்-ஞானவொளி. பெருமான்-பெருமையுடையோனாகிய சிவபிரான். வேள் எனும் குழகன்-வேளென்னும் பெயரையுடைய முருகன். சந்திரனைக்குறிக்கும்போது, பொன் - இலக்குமி, பொன்னிறமுமாம். வனம் மரவங்கள்-அழகிய கற்பகமரங்கள். வனம்-வர்னம எனினுமாம். மால் அரி-பெரிய உச்சையிச்சிரவமாகிய குதிரை. களிறு இனம்-களிற்றுமீனினங்கள். அலைவாய் - கடலினிடத்தில். பொன் அம் சிலம்படி - அழகிய மேருமலையின் கீழ்ப்பாகம். புலம்பு உற சூழ்தல் - வருத்தமுறச் சூழ்ந்துவரல். மிடையும் அம் கமலம் அயர-நெருங்கியிருக்கு மழகிய கமலங்கள் (குவிதலாகிய) தளர்ச்சியடைய. குவலயம்-குவளைமலர்கள். ஒளிக்கதிர்-ஒளியாகிய பிரகாசம். பெரு மான் - பெரிய (களங்கமாகிய) மான். வேள் எனும் குழகன்-வேளென்னு மிளமைப்பருவமுடைய மதன். வேள்-விருப்பத்தைச்செய்பவன், விரும்பத்தக்கவன் என்றுமாம்.

மண்டலம் புகழாத வன்படுஞ் செவ்வியின்
மாண்டவரை யுச்சிமீது
வயங்கிய கரஞ்சேர்த்தி யாணவ விருட்குழா
மாற்றிநற் பசுமென்பயிர்
கண்டக மகிழ்ந்துநெடு வனுற விளங்தொளி
கலந்தமணி கான்றகதிர்நீள்
கடிநாறு தன்னடி வணங்கவெளி வந்துதெண்
கடலுலக முற்றுமேத்த

விண்டல நெருங்குமீன் கணமாதர் புடைசூழ
மேவியுல கந்தனதியல்
வீறுபெற நோக்கினா லீரெண் கலைப்பொலிவு
மெய்மையிற் காட்டுமுறையால்
அண்டர்தொழு மெம்மையா ளம்மையை நிகர்ப்பைநீ
யம்புலீ யாடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட
னம்புலீ யாடவாவே. (2)

(2) அம்பிகையைக்குறிக்கும்போது, மண்டலம் புகழாத வன்பு அடும் செவ்வியில்-உலகந்துதிக்கப்பெறாத (ஆணவமலத்தின்) வலிமையை யொழிதற் குரிய பருவத்தில். மாண் தவரை உச்சிமீது வயங்கிய கரம் சேர்த்தி-மாட்சிமை யுடைய தவத்தினராகிய அடியவர்க்குச் சிரத்தின்மேல் விளங்கிய கையைக் கவித்துவைத்து. உச்சிமீது கரஞ்சேர்த்தலாவது-சத்தகுருவில் அம்பிகையுமோர் குருவாதலால், அவள் அடியவர்க்குத் தீக்கைபுரியுங்காலத்தில் அஸ்தமஸ்தக சையோகஞ்செய்த லென்க. ஆணவம் இருள் குழாம் மாற்றி-ஆணவமலமாகிய இருட்குவியலை யொழித்து. ஆணவவிருளிற்குச் சத்திகள்பலவாதலால், ஆணவ விருட்குழாமென்றார். நல் பசு மெல் பயிர் கண்டு அகம் மகிழ்ந்து நெடு வான் உற-நல்லவுயிர்களாகிய மெல்லியபயிர்கள் தெரிசித்து உள்ளேமகிழ்ந்து உயர்ந்த பெருமையாகிய கதியையடைய. விளைந்து ஒளி கலந்த மணிகான்ற கதிர் நீள் கடி நாறு தன் அடி வணங்க எளிவந்து-உண்டாகி யொளிபொருந்திய மணிகள்கக்கிய பிரகாசமிகுந்த வாசனை யுண்டாகின்ற தன் பாதத்தைவணங்க இலேசாக வந் தருளி. மீன் கண் அம் மாதர்புடை சூழ மேவி-மீன்போலு மழகிய கண்ணை யுடைய அரம்பையர்பக்கமே சூழ்ந்திருக்கப்பொருந்தி. ஈர் எண் கலை பொலிவும் மெய்மையிற் காட்டும் முறையால்-பதினாறுகலைகளின் விளக்கமு முண்மையிற் காட்டுகின்ற முறைமையால் என்க. நாலீரெண்கலையெனக்கொண்டு அறுபத்து நான்கு கலையெனக் கூறலுமாம். சோடசகலைகளாவன - அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்தசந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உன்மனை என்க. அறுபத்துநாலுகலைகளாவன பொருட்டொகைநிகண்டி லறிக.

சந்திரனைக்குறிக்கும்போது, ஆதவன் படும் செவ்வியில் - சூரியன் அத்தமிக்கும்வேளையில். மாண்ட வரை உச்சி மீது வயங்கிய கரம் சேர்த்தி - மாட்சிமை பொருந்திய உதையகிரிமுடிமேல் விளங்கிய கிரணங்களைப் பொருந் தச்செய்து. ஆணவம் இருள் குழா மாற்றி - ஆணவமலத்திற்கொப்பாகிய இருட் குவியலை நீக்கி. பசு மெல் பயிர் வான் உற விளைந்து மணி கான்ற கதிர் - பசிய

மெல்லிய பயிர்கள் வானத்திற்பொருந்த வளர்ந்து விளைவுற்று மணிகளைக்கக்கிய நெற்கதிர்கள். கடி நாறு தன்அடி வணங்க வெளிவந்து - விளக்கமுண்டாகின்ற தன்பாதங்களை வணங்கிநிற்க ஆகாயத்திற்றோன்றி. மீன்கணம் மாதர் புடை சூழ மேவி - நக்ஷத்திரக்கூட்டமாகிய மாதர்கள் பக்கமேசூழ்ந்திருக்கப்பொருந்தி. ஈர் எண் கலை பொலிவு-பதினாறு கலைகளின் பிரகாசமென்க. நெற்கதிர்களில் மணிவிளைதலுண்டென்பதை திருவிளையாடற்புராண மாணிக்கம்விற்றபடலத்திற் காண்க.

கங்கையும் பாந்தளுந் தும்பையுஞ் செம்பொற்
கடுக்கைச் செழுந்தொடையலுங்
கபாலமுங் கொக்கிறகு மூற்றிருந் தொழுகுதேங்
கமழ்ந்தபூ மத்தமுநறுங்
கொங்குதவ ழாத்தியும் வன்னியு மெருக்குங்
குளிர்ந்தவறு கம்புல்லுமேற்
கோமளப் புலவோ ரிறைக்குமந் தாரமுங்
கொய்துதவர் தூற்றுமலருந்
தங்கிய பிரான்சடைக் காட்டினி லுனக்குரிமை
சற்றலால் வேறுமுண்டோ
தாவிலெண் ணான்கவய வத்தினுஞ் செம்பாதி
தனதெனக் கொண்டுவாழும்
அங்கவ ணினக்கதிக மென்பதற் கையமில்லை
யம்புலீயாட வாவே
அழகுவள ருங்குளத் தாரமுத வல்லியுட
னம்புலீ யாடவாவே. (3)

(3) பாந்தள்-பாம்பு. மத்தம்-ஊமத்தம்பூ. கோமளம்-அழகு. தா இல் எண்ணான்கு அவயவம் - கேடில்லாத (அப்பிரான்) முப்பத்திரண்டவயவங்கள். செம்பாதி-நேர்பாதி. தனது-தனக்குரியது. பிரான் திருமேனி அர்த்தநாரி யுருவாதலாற் செம்பாதி தனதெனக் கொண்டென்றார். கங்கை முதலியவற்றையெடுத்துக்கூறலால் அவைகளி லொவ்வொன்றிற்குமுண்டா முரிமைபோல சிறிதிடமே உனக்குமுரிமையுண்டென்பது கருத்தாயிற்று.

உருநிறை யுவாத்தோறும் வாக்குநின் னமிழ்துண்ட
வும்பர்த் தலத்தினிமையோர்
உவாக்கட லுயிர்த்தவிட முன்னிற்ற லாற்றற்கு
மொல்கினர்கள் சாவாதிரார்

குருநிறை மணிக்கச் சணிந்தவிவள் பவளவாய்க்
கொழியமுதம் வாய்மடுத்த
கோமளச் சோமேசர் விடமயின் ருற்றலுங்
கொண்டன ரிறத்தலிலர்மற்
றிருணிறை யிராவினை விளைத்தியிவ ளுண்ணிறையு
மிருளிரா வினைமுழுவதும்
இரித்திடுவ ளாதலா லிவளொடும் பொன்னே
டிரும்பனையை மன்றவரிபாய்
அருணிறை கடைக்கண்வைத் தெம்மையா ளம்மையுட
னம்புலீ யாடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட
னம்புலீ யாடவாவே. (4)

(4) உவா-பூரணை. ஒல்கினர்-துவண்டனர்கள். குரு-நிறம். மடுத்த-உண்ட. கோமளம்-அழகு. ஆற்றல்-வலி. இருள்-கருமை. விளைத்தி-உண்டு பண்ணுகின்றாய். உண்ணிறையும் இருள் - அஞ்ஞானமென்க. இரித்தல்-கெடுத்தல்.

தெளிக்குமெய் யன்பினல் வழிபட்ட நாளுனது
செல்லனோய் தவிர்த்தளித்த
திருச்சோம நாதனே ருண்டருளு நஞ்சுஞ்
சினந்தவிர்ந் துள்ளொடுங்கத்
துளிக்குமெழி லங்கைத் தலத்திற் றடுத்திட்ட
சுவையமிழ் திருப்பவமிழ்தந்
துணைக்காத் தேந்திப் பசிப்பிணி தெறத்தினந்
துயருழந் துழல்வோரெனக்
களிக்குமுறை தேற்றாது வாளரா வுண்டுண்டு
கக்கத் திகைத்துவெருவிக்
ககனவெளி யோடியும் வடகுவடு சூற்றியுங்
கவ்லுநின் செய்கைநன்றே
அளிக்குல மிரைக்குங் கடிக்குழற் கன்னியுட
னம்புலீ யாடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட
னம்புலீ யாடவாவே. (5)

(5) நோய்-கயநோய். உள்ளொடுங்க-(கண்டத்தின்) உள்ளொடுங்க. சுவையமிழ்து என்றது அமுதாம்பிகையை. ககனம் வெளி-ஆகாயவெளி. வடகுவடு-மேருமலை. கவலல்- கவலையடைதல். நன்றே என்பதில் ஏகாரம் எதிர்மறை.

வணங்குமுறை யாற்றனது திருவுளப் படிநிற்கு
மாந்தர்க்கு மலதிரோத
மாயேய காமிய மருட்பிணி யவிழ்த்துநான்
மறைமுடிவு மெட்டாததோர்
குணங்குறி கடந்தபே ரானந்த வெள்ளக்
கொழுங்கட றிளைத்தாடிடக்
கொடுத்தருளும் வள்ளன்மை நிற்க மற்றுலகினுங்
குளிர்தூங்க வெண்ணுற்கறம்
இணங்குவே தாகம வழித்துறை வழாவகை
யியற்றியது காணுயலே
ஈங்குநீ வரினினது கறைபோக்கி வேண்டியது
மீந்தருள் கொழித்தருளுவாள்
அணங்குகொண் டந்தாத் தலையாதே மம்மையுட
னம்புலீ யாடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட
னம்புலீ யாடவாவே. (6)

(6) மலதிரோதம்–திரோதனமலம். இது உயிர்களைப் போகத்திலழுந்தச் செய்வதென் றறிக. மாயேயம்–தநுகரணபுவனபோகங்கள். ஆனந்தவெள்ளக் கொழுங்கடலென்றது சிவத்தை. எண்ணுன்கறம்–செங்கீரைப்பருவம் ஐந்தாவது கவியிற் காண்க. இயற்றியது–(காஞ்சியிற்) செய்தது. காணுயலே–கண்டிருக்கின்றாய். கறை–களங்கம். அணங்கு- வருத்தம்.

குடங்கைமல ராற்செம்பொன் மேருவைத் தனுவெனக்
கோட்டிய மலைக்குமருகன்
கோமளச் சிலைமார்பு மைந்தனை யிரட்டித்த
குலவுப் புயக்குவடுமேல்
வடங்கதுவு மோட்டிளங் கோங்கினும் வண்டினு
மலங்கக் குழைத்தவணினை
வருகென் றழைத்திடவு மதியா திருத்தியிவள்
வன்கதக் கனலிதோய்ந்த

தடங்கட் கொடும்படைச் செய்யசுடர் வேல்கொண்டு
தாக்கினுயிர் பொன்றிவிடுதல்
சரதமற் றெங்கெங் கொளிப்புறினு மிவளிலாத்
தானமொன் றில்லைகண்டாய்
அடங்கிய தடங்கமல நெஞ்சா தனத்திருவொ
டம்புலீ யாடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட
னம்புலீ யாடவாவே. (7)

(7) மலைக்குமருகன் என்றது சிவபிரானை. கோங்கு—முலையாகிய கோங் கரும்பு. வண்டு—வளையல். மலங்க—கலங்க. கதம் கனலி—கோபாக்கினி. சரதம்—உண்மை. எங்கும்நிறைந்த சிவத்துடனியைந்திருத்தலால் இவளில்லாத தான மொன்றில்லை யென்றார்.

துடிபட்ட கைத்தலத் தெம்பிரான் மகிழ்தருஞ்
சுந்தரப் பெண்ணமிழ்தெனத்
தோன்றும் பிராட்டியைமு னெண்ணாத தக்கனார்
துயர்கூர்ந்து பட்டபாட்டை
முடிபட்ட வானவர் குழாத்தோடு முடனின்று
முழுவதும் பட்டறிதியிம்
மொய்குழற் செல்விதனை யவமதித் தின்றுநீ
முன்னுறா தகன்றொழிவையேற்
கடிபட்ட விதழ்தின்று கறுவினு னின்னிலைமை
கடிபட்டு மாழ்குவையலாற்
கலைமுழு மதித்தே வெனும்பழைய பெயரொடுங்
கலைமதி யிலாததேவென்
றடிபட்ட பாவிற் புதுப்பெயரு மாளுவா
யம்புலீ யாடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட
னம்புலீ யாடவாவே. (8)

(8) துடி—உடுக்கு. முன்னுறுதி—முன்வந்துறுமல். கடி—மணம். கறுவி னால்—கோபித்தால். கடிபட்டு—கடிதலுற்று. மாழ்குவை—மயங்குவாய். கலைமதி—நூலறிவு. பாவில்—(புலவோர்கூறுங்) கவிகளில். அடி—(தளைகளானியன்ற) அடிக ளெண்க.

சங்கையா னங்கையிவ ளெம்பிரான் புலவியிற்
றடங்கருங் கட்கடைநுதி
சற்றே கறுப்புழித் தாமரைச் சீறடிக
டாக்குங் கடுந்தொழிலினுற்
கங்கையா டித்துடித் திவள்கருணை யாற்றினைக்
கைகூப்பு மிறையேந் துமான்
கதறிவிழி மானைத் தொழுந்தொடையல் வண்டெலாங்
கருங்குழற் றுவுமரவம்
மங்கையா டாதபைப் பாந்தளைக் காவென்று
வாவுமற் றுங்குநீயும்
வானுதன் மதிக்கிறைஞ் சிடுவையன் றேயதனை
மதியாத தென்னைகொலெமக்
கங்கையா மலகமென வன்புகூ ரம்மையுட
னம்புலீ யாடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட
னம்புலீ யாடவாவே. (9)

(9) சங்கை-ஐயம். புலவி-ஊடல். நுதி-நுனி. கறுப்புழி-கோபித்தால். மங்கையென்றது உமாதேவியை. ஆடாதபைப்பாந்தள் என்றது அல்குலை. இறைஞ்சிடுவை-(காவென்று) வணங்குவாய். அங்கை ஆமலகம் என-உள்ளங் கையிலுள்ள நெல்லிக்கனியைப்போல பிரத்தியக்ஷமாக. உறுதியாக என்றுமாம்.

கைப்போது நீட்டிமுன் விரித்துனை யழைப்பவுங்
காணுதி போல்வந்திலாக்
காரணத் தாலம்மை சீறுதலு மங்கையைக்
கரும்பாந்த ளென்றஞ்சினுன்
இப்போது தாழ்க்கலான் வருவனென் றிதுகாறு
மிவ்வாறு தப்புவித்தோம்
இன்னுநீ வாராது மத்தரிற் றிரிதியே
லினியுனக் கேதுபுகலோ
செப்போது கொங்கைப் பிராட்டியிவள் சோமேசர்
செங்கண் புதைத்தஞான்று
தினகரச் செல்வனெ டழுங்கித் திகைத்தநின்
றிறமறந் தனைபோலுமால்
அப்போது பட்டதை நினைந்துமற் றிவளுட
னம்புலீ யாடவாவே
அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட
னம்புலீ யாடவாவே. (10)

(10) சிறுதல் ஈண்டுக் கோபித்தல். கரும்பாந்தள்—கரும்பாம்பு, இது இராகுக்கோள். "இராகுக்கோளேகரும்பாம்பாகும்" என்பது திவாகரம். தாழ்க்கலான்—தாமதிக்கமாட்டான். மத்தரில் – உன்மத்தரைப்போல. புகல்—தஞ்சம். பட்டதை—(உண்டாகிய) துன்பத்தை. இப்பருவத்தில், முன்னிரண்டுகவியிற் சாமமும், ங, ச-ஆங் கவிகளிற் பேதமும், ரு, சு-ஆங் கவிகளில் தானமும், எ, அ, கூ, கO-ஆங் கவிகளில் தண்டமுங் கூறுதல்காண்க.

அம்புலிப்பருவமுற்றிற்று.

---

எட்டாவது

# அம்மானைப்பருவம்.

176041
600 008.

இப்பருவம், பிள்ளையைநோக்கி மாதர்கள் முத்தம்மானைமுதலிய அம்மானையை யெடுத்தாடியருளவேண்டுமெனக் கூறும்பருவமாம்.

O25:38.2111C
N21

வம்பிய ஜெடைக்கூந்தன் மீமிசைக் கதிர்வீச
வாள்பட்ட கோற்றொடிக்கை
மலரினைக் கண்டுசில வண்டத் து மதியங்கள்
வனசமி தெனுங்கருத்தாற்
பம்பியட ரிருள்கண்டு முகிழாமை யாற்றமைப்
பரிசித்தல் வேட்டதாகப்
பாவித் து றுந்தொறுந் தன் றுணைமை யன்மையாற்
பங்கயம் விதிர்த் துவெகுளா
வெம்பியகல் வானத் தெழுந்தோ டிடத்தள்ளி
விடலெனச் செங்கைகளால்
வேலினை யிகந்தொருவி வார்தரு கொடும்புருவ
வில்லொடு கிடந்துமிளிரும்
அம்பிய றடங்கணொளி கொண்டுலவு நித்திலத்
தம்மானை யாடியருளே
ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி
யம்மானை யாடியருளே. (1)

(1) வம்பு—வாசனை. மீமிசை—மேல். வாள்—ஒளி. கோல் — வளைவு. வனசம்—தாமரை. பம்பி—பரவி. கூந்தலொளியை இருளென்றார். பரிசித்தல் ஈண் டணைதலைக் குறித்தது. துணைமை—நாயகனாகிய சூரியனுடையதன்மை. விதிர்த்து—நடுங்கி. தடங்கண் என்றது அன்மொழித்தொகையாய் அம்பிகையைக் குறித்த தென்க. நித்திலவம்மானைகளைப் பலமதியங்களாகக் கொள்க.

இருள்பூத்த நெறிசுரி கருங்குழ லரம்பையர்க
ளெண்ணிலார் கவரிவீச
எறிசுடர் மணித்தவிசு வீற்றிருந் தாசுபுரி
யேந்தல்குல வரைகளோடுந்
தெருள்பூத்த நுந்தைசிற கீர்த்தமை குறித்துச்
செயிர்த்தவனை யண்டமுகடுந்
தெறிபடக் கைக்கொண் டெறிந்தோச்சி மீளத்
திகைத்துவீழ் தோறுமுன்றன்
மருள்பூத்த வெகுளிதணி யாமையாற் பின்னரும்
வன்கண்மை கொண்டோச்சல்போன்
மருங்குசூழ் தோழியர்த மிணைவிழியி னிழலை
மரீஇச்சுலவி யோடியாட
அருள்பூத்த கைகளா லொளிபூத்த மரகதத்
தம்மானை யாடியருளே
ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி
யம்மானை யாடியருளே. (2)

(2) ஏந்தல்—இந்திரனாகிய அரசனென்க. நுந்தை என்றது பனிமலையை. அவனை—அவ்விந்திரனை. ஓச்சி—எறிந்து. வன்கண்மை—கொடுமை. இந்திரனை மரகதத்தம்மானையாகவும், அவனுடற்கண்கள் தோழியர்கள் விழியினிழலாகவுங் கொள்க.

ஒழுங்குபடு மண்டகோ டிகடொறு நிலாவுறூஉ
மொண்கமல மாநிதிகளும்
ஒலிகொண்ட வெண்சங்க நிதிகளுஞ் சார்ந்தவர்க்
குதவுநின் கரநோக்கிவான்
செழுங்கதியு முய்த்தளித் திடுநிதிய மீதெனத்
தேர்ந்துவந் தளவளாவித்
திருவாய்ந்து விடைகொண்டு தம்பதி குறித்துமேற்
சேண்வழி நடத்த லேய்ப்பக்

கொழுங்கதிர் பரப்பிக் கவின்றசெம் மணியாற்
குயிற்றுமம் மனைகள்பலவுங்
குளிர்நிலாக் கான்றுவெள் ளொளிவீசு முத்தங்
கொழிக்குமம் மனைகள்பலவும்
அழுங்குமணி மேகலைச் சிற்றிடை யெடுத்தெடுத்
தம்மானை யாடியருளே
ஆரண முழக்கு கமலாகர புரத்தலைவி
யம்மானை யாடியருளே. (3)

(3) சார்ந்தவர்க்கு—நின்னையடைந்தவர்க்கு. வான்—பெருமை. ஈது—இந்தக் கை. அளவளாவி—கலந்து. சேண்வழி—ஆகாயமார்க்கம். எய்ப்ப—ஒப்ப. அழுங்குதல்—அழுந்துதல். பதுமநிதி—தாமரைவடிவமாகவுள்ளது. சங்கநிதி—சங்குவடிவமாகவுள்ளது. இவற்றைச் சூடாமணிநிகண்டில் ஆறுவது தொகுதி அ-ஆவது கவியிலறிக.

தேங்கலுழி யூற்றெடுத் தோடுமம் போருகச்
செல்வமட வாரிருவருந்
திங்களைக் கண்டினி யிருக்கினெமை நந்தவிசு
சிறைசெயு மெனக்கவன்று
பூங்கமலம் விட்டோரீஇத் தங்கொழுநர் பதியுறப்
போமிடைத் திரும்பிநோக்கிப்
புகழ்ந்திவை மதிக்குமுன் முகிழாமை தேர்ந்துளம்
பூரித்து வருவதேய்ப்பத்
தோங்கனியு மும்மலத் துகளீர்க்கு நின்முகஞ்
சுடர்பூப்ப வங்கையேந்தித்
துரிசற்ற பவளத் திழைத்தனவு நித்திலத்
தொகையிற் குயிற்றியனவும்
ஆங்கமணி வால்வளை தழங்கிட வெடுத்தெடுத்
தம்மானை யாடியருளே
ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி
யம்மானை யாடியருளே. (4)

(4) தேங்கலுழி—தேன்பெருக்கு. தவிசு—ஆசனமாகிய செந்தாமரை வெண்டாமரை யென்க. கவன்று—கவலையடைந்து. கொழுநர்—சூரியசந்திரர். இவை—இக்கைகள். தோம்—குற்றம். மும்மலம்—ஆணவம், கன்மம், மாயை. ஆங்க—அசைநிலை.

புத்தமிழ் தருத்து மணி மோலியங் கடவுளர்
புரைப்பசிப் பிணிதவிர்த்துப்
பூதல மருங்கினும் பைங்கூழ்த் தொகுப்பெலாம்
பூரிப்ப மாந்தர்முகனுஞ்
சித்தமு மலர்ந்துகளி கூரச் செழுங்கலைத்
தீங்கதிர் பரப்பியுலவுந்
திங்கட் பிரான்செந் துவர்க்கொடி படர்ந்தவெண்
டிரைமுகட் டெழுகாலையுந்
தத்தலை விரிக்குங் குடாதுகட லுட்புகுஞ்
சமயத்தினுஞ் சேத்தல்போற்
றடங்கையி லெடுத்தெறியு மேல்வையினு மற்றது
தடங்கையிற் புகுபோழ்தினும்
அத்தமுமிழ் சேயொளி கவர்ந்தொளிரு நித்திலத்
தம்மானை யாடியருளே
ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி
யம்மானை யாடியருளே. (5)

(5) புரை—குற்றம். பைங்கூழ்—பசியபயிர். குடாதுகடல்—மேற்குள்ளதாகிய கடல். சேத்தல்—சிவத்தல். எல்லை—பொழுது. அத்தம் என்றது அம்பிகையை. சந்திரனுதயமாகுங்காலத்தினும் அத்தமனமாகுங்காலத்தினுஞ் சிவந்திருக்குமியல்பு காண்க.

மருள்கான்ற நெஞ்சச் சழக்கைத் தடிந்தின்ப
வான்கதி கொடுக்குநின்கை
வயங்குபொற் கடகத் திருங்கவின் முகந்துமலர்
வள்ளலை நிகர்த்துவிழியின்
இருள்கான்ற நீலங் கவர்ந்தராப் பாயலிடை
யேந்தலை நிகர்த்துநுதலின்
இட்டசிந் தூரவெழில் கவர்ந்துநின் கொண்கரை
யிணைந்துமேற் போந்துலாவித்
தெருள்கான் றெவற்றினுந் தோய்வற்று நின்றவச்
சிற்பரம் பொருளையொத்துச்
சேணுடர் கொண்டாட வாடச் செழுங்கருணை
தேக்கிநிறை சோமேசனார்

அருள்கான்ற கண்களி பயப்பமணி நிலத்திலத்
தம்மானை யாடியருளே
ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி
யம்மானை யாடியருளே. (6)

(6) மருள்—மயக்கம், சழக்கு—அறியாமை, நீதிக்குமாறுனதுமாம் என்பர். கவின்—பொன்னிறவழகு. நீலம்—கருநிறம். இணைந்து—ஒத்து. மேற்போந்து—(அம்மூன்றுநிறமும்பற்றுது) மேலேபோகி. மேற்போகுங்காலத்தில் முத்துமணி தன்னிறமாகிய வெண்ணிறங்காட்டியிருத்தலாற் சிற்பரம்பொருளை யொத்து என்றூர். நிகர்த்து இணைந்து ஒத்து ஆட் ஆடியருளென இயைத்துரைக்க. திரி மூர்த்திகளுக்கு நிறமும் அம்மூர்த்திகட்கு மேலானசிவபிரானிறமு மீண்டறிக.

வேறு.

முத்த மிழைத்தன வும்பவ ளத்திரண் மொய்த்தன வுங்கலைகண்
முற்று நிறைந்த பசுங்கிர ணச்செழு முழுமதி யாமெனவும்
எத்திசை யுங்கதிர் கான்றிருள் சீத்தெழு மென்றா ழாமெனவும்
எண்ணி யுணற்கெழு மூன்று ளராவு மிருஞ்சிறை நேமியுநின்
னுத்தி முலைக்கு மிடைக்கு மிடைந்தய லோடவும் வெம்பசியால்
உயங்கு சகோர மயங்கி யுடன்றிரி வுற்று வருந்தவுமென்
னத்த னுளத்தி னடிக்கு மடப்பிடி யாடுக வம்மனையே
அரத்தை துரந்து குளந்தை புரந்தவ ளாடுக வம்மனையே. (7)

(7) முத்தம்மனை மதியாமெனவும், பவளத்தம்மனை என்றூழாமெனவுங் கூட்டியுரைக்க. சீத்து—துடைத்து. என்றூழ்—சூரியன். மூன்று என்றது அரா, நேமி, சகோரம். அரா சூரியசந்திரரை யுண்பது, நேமி சூரியகிரணத்தை யுண்பது, சகோரம் சந்திரகிரணத்தையுண்பதெனவறிக. உத்தி—தேமல். நேமி முலைக்கும் அரா இடைக்கும் இடைந்தயலோடவுமெனக் கூட்டுக. இடைந்து—ஒவ்வாமையாற்பின்னிட்டு. திரிவுற்று—சுழற்சியுற்று.

வடங்கெழு கொங்கை நிகர்ப்ப வளர்ந்த வடா து பொருப்பினைநின்
மகிழ்நர் கரத்தினி லின்னும் வளைத்திடு மாறெரு சூழ்ச்சிநினைத்
துடங்கழி மூன்று புரங்களை மீண்டு முலாவ வெழுப்பிவரம்
உதவி வெளிக்கண் விடுத்தல் கடுத்திட வெள்ளொளி முத்தினுமோர்
முடங்க லுறுதொளிர் நீல மயத்தினு மொய்த்த பசும்பொனினும்
முற்ற வமைத்து விடுத்தரு ளம்மனை மூன்றும்விண் மீதுலவ
அடங்கியவன்ப ருளங்குடி கொண்டவ ளாடுக வம்மனையே
அரந்தை துரந்து குளந்தை புரந்தவ ளாடுக வம்மனையே. (8)

(8) வடம்—மணிவடம். வாடாதபொருப்பு—வடக்குள்ளதாகிய மேருமலை. மகிழ்நர்—நாயகராகிய சிவபிரான். உடங்கழி—ஒருமிக்கவழிந்த. மூன்றுபுரங்களும் பொன்னாலும் வெள்ளியாலும் இரும்பாலுஞ் செய்யப்பட்டுள்ளன என்பதைக் காஞ்சிப்புராணங் கைலாயப்படலத்திலறிக. ஏர்முடங்கல் உரூது—அழகுமடங்குத லுறுமல். முத்தம்மனைக்கு வெள்ளிக்கோட்டையும், நீலத்தம்மனைக்கு இருப்புக் கோட்டையும் பொன்னம்மனைக்கு பொற்கோட்டையு முவமானமாகக் கொள்க.

உய்ய வரந்தரு நித்தன் முகத்தி லுயங்க முனந்தகையும்
ஒண்கா மின்னு மொரூத்த லுருது ற வாடி நயப்பமெனு
வெய்ய நெருப்பெழு செங்கதி ருங்குளிர் வீசு பனிக்கதிரும்
மேவி யகங்கையி னேடுறு கேண்மை விளைத்து விண்ணேகுதல்போ [ற்
செய்ய மணிப்பவ ளத்தி னிழைத்த செழுந்திர ளம்மனையுந்
தெள்ளிய முத்தி னிழைத்த கதிர்க்குவை சிந்திய வம்மனையும்
ஐய நுசுப்பொசி யத்தளி ரங்கையி னாடுக வம்மனையே
அரந்தை துரந்து குளந்தை புரந்தவ ளாடுக வம்மனையே (9)

(9) தகைத்தல்—தடுத்தல். இன்னும் ஒறுத்தலுரூது—(முன்னஞ் சுவாமி திருக்கண்புதைத்தகாலத்தி லொறுத்தல்போல) இன்னு மொறுத்தலைப்பொருந் தாது. ஒறுத்தல்—வருத்துதல். கேண்மை—சிநேகம். ஐயநுசுப்பு—உண்டோ இன்றோவென்னுஞ் சந்தேகத்துக்கிடமாகிய இடை. ஒசிய - துவள.

கதிருமிழ் நீல மணித்திரண் மொய்த்த கருஞ்சுட ரம்மனைநின்
கட்படை யாலடி யார்மல மோடல் கடுப்ப வெழுந்துலவ
முதிரொளி துற்ற செழும்பவ ளத்திரண் முற்றிய வம்மனையம்
மும்மலம் வென்ற திறற்பிர தாப முளைத்தெழ லொத்தெழவெண்
மதிநிகர் முத்த நிரைத்து வனைந்தவம் மானை யதன்பிறகே
வயங்கிய கீர்த்தி திரண்டெழு கின்றது மான வெழுந்துலவ
அதிர்வளை யங்கையி னலமு தாம்பிகை யாடுக வம்மனையே
அரந்தை துரந்து குளந்தை புரந்தவ ளாடுக வம்மனையே. (10)

(10) கட்படை—கண்ணாகிய ஆயுதம். மலம்—மூவகைமலம். துற்ற—நெருங் கிய. முற்றிய—விளைந்த. பிரதாபம்—வீரம். பிறகு—பின்.

அம்மானைப்பருவமுற்றிற்று.

———

ஒன்பதாவது

# நீராடற்பருவம்.

இப்பருவம், பிள்ளையைநோக்கி மகளிர்கள் ஆற்றுவெள்ளநீராடவேண்டிக் கூறும் பருவமென்க.

தேங்கிய செழுங்கலைத் திங்களுக் கருள்செய்த
செல்வர்முடி மீது தானுந்
திளைத்தாடு முரிமையாற் றிளைத்தாடு வோர்க்கெலாந்
தீப்பிணிப் பவந்தெறுதலால்
ஓங்கிய கலித்திரைக் கங்கையொன் றேநம்மை
யொத்ததா மென்றதனொடும்
உறவாடல் வேட்டெழுந் தாலென்ன விண்ணத்
துயர்ந்துடுக் கூட்டமலைமேற்
றூங்கிய கிளைக்குலங் கான்றமணி யைத்தமது
சாதியென வோகைகூரத்
தண்கதிர்க் கடவுளொடு செங்கதிரை யண்டத்
தடஞ்சுவர்ப் பிடரினெற்றி
வீங்கிய வொலிக்கூட்ட மீன்றுவரு பாலிநதி
வெள்ளநீ ராடியருளே
வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை
வெள்ளநீ ராடியருளே. (1)

(1) தானும் என்றது பாலிநதியைக்குறித்தது. கலி—ஒலி. அதனொடும்—அக்கங்கையொடும். விண்ணத்துயர்ந்து—ஆகாயத்தின்மேலெழும்பியுயர்ந்து. உடு-நட்சத்திரம். கிளைக்குலம்—(மலையிலிருக்கின்ற) மூங்கிற்கூட்டங்கள். உடுக்கூட்டம் ஓகைகூர எனக் கூட்டுக. எழுந்தாலென்ன வுயர்ந்து எற்றி ஈன்றுவரு பாலிநதியென்க. இப்பாலாறு தொண்டைநாட்டுக்குரியது.

இருகவு ளுடைந்தூற்று பூங்கடாங் கமழ்முகத்
தெறுழ்வலிக் குழூஉக்களிறெலாம்
எழிலிக் குழாத்திற் பெயர்ந்துழி தருஞ்சிகரி
யிடமாதி நான்குமாற்றத்

தருவள னடங்கத் தழீஇக்கொண்டு பின்னவை
தளர்ந்துகலி கூராவகை
சாலவெதி ரொன்றுக் கனந்தமாப் பெருவளன்
றண்டா தளித்துவரிசூழ்
அருநில னிடத்தொருவர் தினையளவை யாற்றிடினு
மருளினிலை பெறுவாழ்க்கையோ
டழியாத திருவுமெதி ராங்கவர்க் குதவுநின்
னடியவரை யொத்துமாக்கள்
வெருவியய லோடத் தழங்கிவரு பாலிநதி
வெள்ளநீ ராடியருளே
வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை
வெள்ளநீ ராடியருளே. (2)

(2) கவுள்—செவியடி. எழிலி—மேகம். உழிதால்—சுழலல். சிகரி - மலை. நான்கு என்றது குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல். ஆற்றத்தருவளம்—மிகவுந்தரு கின்ற பலபண்டங்கள். தழீஇக்கொண்டு—வாரிப்பொருந்திக்கொண்டு. அவை—அந்நான்கும். கலி—வறுமை. தண்டாது—நீங்காது. உவரி—கடல். தழீஇக் கொண்டு அளித்து ஒத்துத்தழங்கிவரு பாலிநதியென இயைத்துரைக்க.

வளைத்தமுப் புரிசைத் தலத்தினின் றயில்கொண்ட
வாளிக்குழா மெழுதல்போல்
வயங்கிய பசும்பொற் றிரட்குவட் டினையும்வல
வாளரித் திரளையுநெடுந்
துளைத்தகை முகக்கடாக் குஞ்சரத் தினையுஞ்
சுழிக்குமச் சுழிமூன்றினுந்
துண்ணென வெழுந்தநெட் டுடல்வாளை தெய்வத்
துறைப்புனற் கங்கைநதியிற்
றிளைத்ததிற நோக்குவார்க் கிப்புனல் படிந்தாடு
செய்தவப் பயனையிந்தத்
திண்பூத பரிணம தேகத்தி லுதவுமா
தீர்த்தமிது வெனவியப்பு
விளைத்துவிண் ணுடும் பழிச்சவரு பாலிநதி
வெள்ளநீ ராடியருளே
வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை
வெள்ளநீ ராடியருளே. (3)

(3) அயில்—கூர்மை. அரித்திரள்—சிங்கக்கூட்டம். சுழிமூன்று—பொற்றிரட்குவட்டைச் சுழிக்குஞ்சுழி, அரித்திரளைச் சுழிக்குஞ்சுழி, குஞ்சரத்திரளைச் சுழிக்குஞ்சுழி யென்க. மூன்றுசுழியும் பொன் வெள்ளி இரும்பாலாகிய மூன்று மதிலாகக் கொள்க. மூவகைச்சுழியினுமெழுந்த வாளைமீன் விண்ணிலுள்ள கங்கைநதியிலேசென்று திளைத்த திற நோக்குவார்கள் இப்பாலிப்புனலிலாடுந் தவப்பயனைப் பூதசாரசரீரமாகிய தேவசரீரத்தினுலெய்தாது பூதபரிணுமசரீரத்திலெய்த உதவு மகாதீர்த்த மிதுவென்ன வியப்புவிளைத்து விண்ணுடும் பழிச்சவரும் பாலியென்க. திளைத்தல்—அனுபவித்தல். பூதபரிணுமசரீரம்—பஞ்சபூதவிகாரத்தாலுண்டாகிய சரீரம். பழிச்சல்—துதித்தல்.

திரைத்தொலி பரப்பியலை வீசும் பெருங்கடற்
　　றீம்பயம் பருகியார்த்துச்
செல்லின மெழுந்து நெடு வான்படர்த லுந்தனது
　　தீர்த்தம் படிந்தாடுநர்
புரைத்தொகை விளைக்குமல மாயைகன் மக்குழாம்
　　பொள்ளென விரிந்தோடலும்
புரையக் கருங்குழற் காட்டுமலர் கூரும்
　　பொலஞ்சிறைத் தும்பிமுழுதும்
இரைத்து மணி வானத் தெழுந்தோட நீராடு
　　மேந்திளங் கொங்கைமடவார்
எறிட்ட மணியணிகள் சிந்திய கரைக்கணின்
　　னிணையடி வருந்தாவகை
விரைத்துணர் நிரம்பப் பரப்பிவரு பாலிநதி
　　வெள்ளநீ ராடியருளே
வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை
　　வெள்ளநீ ராடியருளே. (4)

(4) பயம்பருகி — நீரையுண்டு. செல்லினம்—மேகக்கூட்டம். படர்தல்—செல்லுதல். புரைத்தொகை—குற்றக்கூட்டம். பொள்ளென—விரைவாக. புரைய-ஒப்ப. தும்பி-வண்டு. மணிவானம்—கரிய ஆகாயம். எறிட்ட—கோத்திட்ட. செல்லினம் வான்படர்தலும், மலமாயைக்கன்மக்குழாம் இரிந்தோடலும், புரையத் தும்பிமுழுதும் வானத்தெழுந்தோட நீராடுமகளிரென வியைத்துரைக்க.

கொழுந்தாம மாடவது சுற்றுங் குழற்கற்றை
　　கூட்டுவிட் டாடவதனிற்
குடிகொண்ட மாதர்ச் சுருப்பின முகேரெனக்
　　குரல்விளைத் தாடவ துசூழ்
செழுந்தா துகுங்கஞ்ச வெள்ளனந் திரையூடு
　　சேர்ந்தாட வதனருகுநின்
திருமேனி கண்டின மெனப்பிணி முகக்குலஞ்
　　சிறைவிரித் தாடவதுபோல்
எழுந்தாடு தெய்வப் பிணக்குழாங் கண்டுகண்
　　டின்பநீ ராடவவர்தோள்
இணங்கும் பெரும்புலவர் கைகொட்டி யாடவெள்
　　ளீர்ம்புனற் கங்கைபுவிமேல்
விழுந்தாங் கொழுங்குகொண் டாடிவரு பாலிநதி
　　வெள்ளநீ ராடியருளே
வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை
　　வெள்ளநீ ராடியருளே. (5)

(5) தாமம்-மாலை. குழற்கற்றை-கூந்தற்றெகுதி. மாதர்-அழகு. முகேரெனல்-ஒலிக்குறிப்பு. குரல்-ஒலி. அது-அச்சுருப்பினம். பிணிமுகம்-மயில். பிணா-பெண். இன்பநீர் - அகமகிழ்ச்சியாகிய நீர். புலவர் - தேவர்.

வேறு.

ஏந்து பிறைவெண் மருப்புரற்கா லெழில்கூர் மலைவா ரணத்திரள்கள்
　　எய்திப் பரவை கலக்குமலை யேப்பத் துளைந்து விளையாடி
நீந்தி யணைந்து கரையேறி நிறையுங் களிப்பு மீக்கொண்டு
　　நிலாவெண் டாளக் குவைபெயர்த்து நீள்வா ரிதியின் கரைக்கணலை
மாந்து முகிலா லியைச்சொரிந்தா னானச் சிதறும் பரப்பினிடை
　　வான்மீ னடுவட் பலமதியம் வதிந்தா னிகர்ப்பச் சங்கினங்கள்
போந்து துயிலும் பாலிநதிப் புதுநீ ராடி யருளுகவே
　　பொற்பார் குளந்தை யமுதவல்லி புதுநீ ராடி யருளுகவே. (6)

(6) பரவைகலக்கு மலை என்றது மந்தரமலையை. மாந்தல்-உண்ணல். ஆலி-ஆலங்கட்டி. மான-ஒப்ப, பரப்பினிடை-அம்முத்துக்களின் பரப்பிடத்தில். யானைக்கு மேகமும், தாளக்குவைக்கு ஆலியும் உபமானமாம். தாளப்பரப்பிற்கு வான்மீனும், சங்கினங்கட்குப் பலமதியமும் உபமானமாம்.

வழியுஞ் செழுந்தேங் கமலமலர் மடவா ரமிழ்தே புனலகத்து
மறைந்தால் யாங்க ணினைப்பிடிக்க வல்லே மெனவஞ் சினங்கூறச்
சுழியும் புனனீ யவ்வாறு துண்ணென் றுளிப்ப மற்றவர்தாந்
துருவிக்காணு தெங்கொழுநர் சேதிப் பிரான்று டலையென்ன
மொழியு முறுப்போ ரிரண்டையுமே முன்னிக் காணூர் யாமிவளை
முழுதுங் காணே மெனநாணி முடிசாய்த் தொதுங்கி நிற்பவருள்
பொழியும் பசிய முகில்பாலிப் புதுநீ ராடி யருளுகவே
பொற்பார் குளந்தை யமுதவல்லி புதுநீராடி யருளுகவே. (7)

(7) கமலமடவார் - இலக்குமி, சரஸ்வதி. வஞ்சினம் - சபதம். துண்ணெனல் விரைவுக்குறிப்பு. துருவி - தேடி. எங்கொழுநரென்றது அரிபிரமர்களை. அருள்பொழியும்பசியமுகில் என்றது அம்பிகையை.

திரையுந் தனது நறும்புனலிற் றிளைத்து முழுகு மடவார்தஞ் [க்கி
செழுந்தேந் தொடையற் சுருப்பினங்கள் சேட்சென்றகலும் படிவில
உரையுந் தொழிலு முள்ளமுந்தன் னுழைசேர்த் தழுந்து வோர்மலநோய்
ஒருவுந் தொழிலைத் தெரித்திதழி யுறழப் பொன்னும் வெண்டலைபோல்
நுரையுஞ் சடைபோற் றுவர்க்கொடியு நணுகு மதிபோற் கரிக்கோடும்
நுடங்க நடித்து வெளுத்துமறை நுவலற் கரிய பரம்பொருளைப்
புரையுஞ் செல்வப் பெரும்பாலிப் புதுநீ ராடி யருளுகவே
பொற்பார் குளந்தை யமுதவல்லி புதுநீ ராடி யருளுகவே. (8)

(8) திளைத்து - அழுந்தி. உரை - வாக்கு. தொழில் - செயல். உள்ளம்—மனம். தன்னுழைச்சேர்த்தழுந்துவோர்—தன்னிடத்தில் வசமாகச்சேர்த்துத் தன்னுடனொன்றாய் இரண்டறநின் றழுந்துகின்ற மெய்ஞ்ஞானமுள்ள மெய்யன்பர். ஒருவுதல் - நீங்குதல். தெரித்து - தெரிவித்து. நுடங்க - அசைய. புரையும்—ஒக்கும். விலக்கித் தெரித்து நடித்து வெளுத்துப் புரையும்பாலியெனக் கூட்டுக. சிவபிரானுக்கு வெள்ளைநிறமுண்டாதலால் வெளுத்து என்றார்.

வேறு.

முகமல ரினையொளி யுகுமதி யாமென முண்டக நொந்தயா
முன்கையி லேற்றிய சங்கொடு சங்க முழங்கிக் கரைபுரள
மகர விருந்துழை யெதிரிய கெண்டை மலங்கு கயற்குலம்வார்
வாளை கலங்கி யெழுந்து குதிப்ப வயங்கு சுணங்கிலமென்
றகநெகு புற்புத முலையி னுடைந்திற வறல்குழல் போற்றகரம்
அணிந்தில மெனநின தடியிற் றன்கவி னழியத் திருமருவிப்

புகழ்நிறை யுங்கம லாகரி பாலிப் புதுநீ ராடுகவே
பூரண ஞான புராதனி பாலிப் புதுநீ ராடுகவே. (9)

(9) சங்கு - முன்னது வளையல். மகரவிருங்குழை - மகரமீன்வடிவமாகச் செய்யப்பட்ட பெருமைபொருந்திய காதணி. எதிரிய - எதிர்த்த. சுணங்கு—தேமல். புற்புதம் - குமிழி. இற - இற்றுப்போக. அறல் - கருமணல். தகரம்—மயிர்ச்சாந்து.

விற்புரு வங்குழை யக்கரு நீல விழித்துணை செங்குவளை
வெல்லநின் மேனி தழைப்பமு கேரென வீங்கிய நீர்குடையா
நிற்புகழ் தெய்வ மடந்தையர் மீதினி னீள்சிவி றித்துளையான்
நிரைத்த குறுந்துளி தம்முட லெங்கு நிரத்தலும் வானவர்தங்
கற்புரை தோள்கள் புதைத்தன ராடக் கடவுள் சடாமகுடக்
கங்கை யவன்றலை யைந்தொடு மாடக் காசினி கொண்டாடப்
பொற்பு மிகுங்கம லாகரி பாலிப் புதுநீ ராடுகவே
பூரண ஞான புராதனி பாலிப் புதுநீ ராடுகவே. (10)

(10) விற்புருவங்குழைய—வில்லாகியபுருவம் வளைய. நீலவிழித்துணை செங்குவளைவெல்ல—கரியகண்களிரண்டும் நீராடலாற் சிவந்து செங்குவளை மலரை வெற்றிகொள்ள. சிவிறி - நீர்த்துருத்தி. முகேரெனல் - ஒலிக்குறிப்பு. நிரைத்தகுறுந்துளி - ஒழுங்குபடச்செய்த சிறியதுளிகள். நிரத்தல்—நிறைதல். நீலம் என்றது கரியநீலப்பூவெனினுமாம்.

நீராடற்பருவமுற்றிற்று.

---

பத்தாவது

## ஊசற்பருவம்.

இப்பருவம், குழந்தையை ஊஞ்சலிலேற்றிவைத்து மகளிர் அவ்வூஞ்சலை யாடச்செய்கிற பருவமாம்.

ஒழுகொளி பரப்பிக் கதிர்த்தெழும் பரிதியை
யொழுக்கித் திரட்டியதுபோல்
உரகமுமிழ் செம்மணித் தூணிறுவி யதனும்ப
ரொளிநிலாக் கான்றகலைகள்

முழுது நிறை திங்களை யுருட்டி நீட்டியதேய்ப்ப
முதிர்வயிர விட்டமிட்டம்
முழுமதியி னின்றிழியு மமிழ்ததா ரைகளென்ன
முத்தணி வடங்கடுக்கிப்
பழுதகலு நவமணிப் பலகையிடை மூட்டியப்
பலகைமேன் மதியமிழ்துணப்
பச்சிளங் கிள்ளையொன் றேறினு லென்னப்
பரிந்திருந் தருளிமுலைமேற்
புழுகொழுக வுயிர்களுக் கருளொழுகு மமுதம்மை
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே. (1)

(1) ஒழுக்கி—ஒழுங்குபடச்செய்து. உரகம்—பாம்பு. நிறுவி—நிறுத்தி. அத னும்பர்—அத்தாணின்மேல். இழிதல்—இறங்குதல். பரிந்து—விரும்பி.

செயலையந் தாருவை யுதைந்தாடு தொறுமச்
செழுந்தருப் பூக்கள்சொரியுஞ்
செயலுதைக் காற்றுது தனைநீங்க வெண்ணிநந்
தேவைத் தணந்துவிளையாட்
டியலைமேல் கொண்டநின் மீதலர்ப் பூம்பகழி
யிளையாது சொரிவதெனவும்
இதுகண் டதற்குநேர் விழிச்சுரும் பீந்தருளி
யிளநிலா நகைமுகிழ்ப்ப
அயலுறாஉங் கொடிமுல்லை யூழ்த்தலர் சொரிந்திட
லருந்துணைமை பூண்டுதானும்
அலர்வாளி பெய்திடுந் திறனெனவு மோர்காட்ட
வைம்படை பொறுத்தபச்சைப்
புயலொடு பிறந்தருட் கடலொடு வளர்ந்தமின்
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே. (2)

(2) செயலை—அசோகு. உதைக்கு—நின்காலுதையினுக்கு. ஆற்ருது—பொறுக்காது. தனையென்றது அசோகை. தேவை—சிவபிரானை. தணந்து—நீங்கி. விளையாட்டியலை—குழந்தைவடிவங்கொண்டு விளையாடுந்தன்மையை. அதற்கு—அவ்வலர்ப்பகழிக்கு. ஊழ்த்து—மலர்ந்து. துணைமை — துணையாகுந் தன்மை. வர்—அழகு. ஐம்படை—பஞ்சாயுதம், அவை சக்கரம், சங்கு, வாள், தண்டு, வில்லென்பன. செயலை பூக்கள்சொரியுஞ் செயல் அலர்ப்பகழி சொரிவதெனவும், முல்லை அலர்சொரிந்திடல் அவ்வசோகிற்குத் துணைமைபூண்டு தானுமலர்வாளி பெய்திடுந்திறனெனவும் வர்கட்ட எனக் கூட்டியுரைக்க. மகளிரால் மலருமரங்கள் பத்துள்ளே அசோகு உதைக்கமலரும், முல்லை சிரிக்கமலருமாதலால் இங்ஙனங் கூறிஞரெனவறிக. அம்பிகை சிவபிரானை நீங்கியிருத்தலால் அவளை அப்பிரான்பாற்சேர்க்க அசோகு முல்லையு மலர்சொரிந்தன என்பது கருத்தாகக்கொள்க. மரங்கள்பத்தாவன—மகிழ், பாலை, பாடலம், முல்லை, புன்னை குரா, அசோகு, குருக்கத்தி, மா, சண்பகமாம். இவைமலர்வதற்கு விவரம் சூடாமணிநிகண்டு பன்னிரண்டாந்தொகுதியில்“ஏடவிழ்மகிழ்சுவைக்க”என்னுமுதற்குறிப்புள்ள செய்யுளிலறிக.

நிலம்பொலி யுயிர்ப்பயிர் மலக்கொடுந் தழல்வெம்மை
நீத்துமெய்ஞ் ஞானமலரா
நின்மலா னந்தச் செழுங்கனி கனிந்தோங்க
நிறையருட் சூல்கொண்டுபொற்
கலம்பொலியு முருவெலாம் பச்சென்று தோற்றிக்
கருங்குழற் கற்றைநாப்பட்
கதிர்த்தசிறு கீற்றிஞன் மின்னியொளி கூர்நுதற்
கார்முகங் கவினவாங்கிச்
சிலம்பொலிசெய் கிண்கிணிப் பருமத்தி ஞற்பெருந்
தீங்குர லெடுத்திடையருத்
திருவருட் டாரைபொழி செய்கைக்கு வாய்ப்பவான்
சேர்ந்துலாய் நிற்றலுறழப்
புலம்பொலியு மடியார்கள் சிந்தைகுடி கொண்டவள்
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே. (3)

(3) இக்கவியில் அம்பிகையை மேகமாகக்கூறிஞரென்க. மலம்—ஆணவம், கன்மம், மாயை யென்னு மும்மலங்கள். மெஞ்ஞானமலரா—மெஞ்ஞானமாகிய மலர்மலர்ந்து. கனிந்து—பழுத்து. ஓங்க—உயர்வடைய. சூல்—கருப்பம். கலம்—ஆபரணம். உரு—வடிவம். நாப்பண்—நடு. கார்முகம்—வில். கவின—அழகு

பொருந்த. வாங்கி—வளைத்து. சிலம்பு—காலணி. பருமம்—இடையிலணியும் பதினன்குகோவைமணிவடம். தீங்குரல்—இனியவொலி. வாய்ப்ப—பொருந்த. வான்—ஆகாயம். உறழ—ஒப்ப. புலம்—அறிவு. ஆட்டும்போது ஊஞ்சல் மேலெழுந்து நிற்றலால், வான்சேர்ந்துலாய்நிற்ற லுறழவென்ருர். உயிர்ப்பயிர் கனிந்தோங்க என இயையும். ஓங்கவென்னுஞ் செயவெனெச்சம் ஈண்டெதிர் காலத்தில்வந்தது. ஓங்க என்பது பொழியென்பதனேடும், உறழ என்பது ஆடியருள் என்பதனேடு மியையும்.

மனக்குல மிடைந்துபின் காட்டவிசை கொண்டாடும்
வன்மையா னினதுருவெலாம்
மணித்திர ளிரைத்தெனச் சிறுவெயர் பொடிந்தலும்
வழிநின்று பணிகேட்டுநின்
னனக்கவி னடைத்திறங் கற்கவரும் வெள்ளானை
யஞ்சிச் செவிக்காலெறிந்
தந்தரக் கங்கையை மடுத்துத் துளித்துவெய
ராற்றுமத் திவலைபரவா
நினக்கடிமை பூண்டுமுன் போற்றுமிமை யோர்முத
னெடுந்தருப் புல்லிறுதிபி
னிரத்தலா லனைத்துநின் மயமெனுஞ் செஞ்சொல்லை
நிலையுறுத் திடுவதேய்ப்பப்
புனக்கிளி நிகர்த்தமென் றீங்கிளவி யமுதம்மை
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே. (4)

(4) இடைந்து—வருந்தி. பின்காட்ட என்றதனல் மனவேகத்தினு மதிகமாக என்பது கருத்தாயிற்று. மணி—முத்தென்க. வழி—திருவுளக்குறிப்பின்வழி. அனம் என்றது அன்னநடையைக்குறித்தலால் ஆகுபெயர். மடுத்து—கையினிறைத்து. பரவா—எங்கும்பரவி. நிரத்தல்—கலத்தல். அனைத்துநின்மயம் என்பது சர்வம் சத்திமயம் என்னும் வேதவாக்கியம். திவலை பரவா ஏய்ப்ப என இயைக்க.

திங்களொளி காட்டுமுக மீதுலவு நாட்டச்
செழுங்கய லுதைந்தூக்கலாற்
செம்பொனி னிழைத்தமக ரக்குழைக ளுஞ்செவிச்
செங்கனக வூசலாடப்

பங்கய விருக்கைமட மாதரது நோக்கியிரு
பாலுமிரு வேமாட்டவும்
பாயுங் கயற்குல மசைக்குமவ் வூசலிற்
பாய்ந்திலதிவ் வூசலெனநீள்
அங்கையின் வலித்தூனி யாட்டுதொறு நின்வா
யரும்புநகை நிலவெழிலினுக்
காங்கவர் முகத்திங்கள் சாயப் புராணமறை
யாகம மளந்தறிவரும்
புங்கவன் மருங்குகுடி கொண்டவமு தாம்பிகை
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகமலாகரீ
பொன்னூச லாடியருளே. (5)

(5) ஊக்கல்—அசைத்தல். இழைத்த—செய்த. அதுநோக்கி—(குழைகள் செவியாகிய ஆசலாடுகின்ற) அதைநோக்கி. கயற்குலமசைக்குமவ்வூசலில்—கண்ணாகிய கயல்கள் அசைக்குங் காதுகளாகிய அவ்வூசலைப்போல. அரும்பு—தோன்றுகின்ற. வலித்து—இழுத்து. சாய—கவிழ.

திண்ணிய பொலஞ்சிகரி வாங்கிய பிரான்சென்னி
தெரிகலா மறையோதிமஞ்
செப்புபழி மொழிமாறு மாறனைக் கூர்தியாய்ச்
சேர்ந்துநின் றுள்சுமந்து
தண்ணிய நிறுதுகண் ணருள்கிடைத் தூன்னுழிச்
சார்ந்திறைவ னூடமீரத்
தாள்பணியு மேல்வைமுடி கண்டுகொண் டுயர்கீர்த்தி
தாங்குவா னெண்ணிவரலுங்
கண்ணியவவ் வஞ்சனை யறிந்ததனை யலமாக்
காண்டுமென வுன்னியேறிக்
ககனத்து முன்பின்ன தாகக் கடாவுதல்
கடுப்பவெண் டாளமொய்த்துப்
புண்ணிய மலர்ந்தனைய வொண்பலகை யேறிநீ
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகமலாகரீ
பொன்னூச லாடியருளே. (6)

(6) பொலஞ்சிகரி—பொன்மலை. வாங்கிய – வளைத்த. மறையோதிமம் என்றது பிரமனாகியவன்னத்தை. பழிமொழி—திருமுடியைக் கண்டேனென்று சொன்ன பழிமொழி. ஊர்தி—வாகனம். தண்ணிய—சாந்தமுள்ள. தாள் என்றது அம்பிகையடியை. எல்வை—காலம். அதனை—அம்மறையோதிமத்தை. அலமரக் காண்டும்—சுழலச்செய்வோம். ககனம்—ஆகாயம். தாளப்பலகைக்கு ஓதிமம் உவமானம்.

அரவமுமிழ் செம்மணித் திரள்சுற் றிழைத்திடை
யலங்கொளிய நித்திலத்தால்
அமைத்ததட னடுச்செழுஞ் செம்பட் டலங்கரித்
தவிர்பல்கை மீதிருத்தல்
இரவகல வெங்கதி ருதும்பரிதி மண்டல
மிளம்பனிக் கதிர்மண்டலம்
எரிக்கடவுண் மண்டலங் கீழ்தொ[illegible] மறைமூன்று
மேய்ந்தபூந் தவிசிலடியார்
பாவநீ நின்றநிலை யொப்பவா னந்த[illegible]
பன்னவன் விழிச்சுடர்க[illegible]
பாலனுகு காட்சியப் பரிசறிந் தெம்[illegible]
பருஉமணித் தவிசெனக்கொள்
புவுபூண் டருளென்று வேண்டுதல் கடுப்பவுயா
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே. (7)

600 008.

(7) சுற்றிழைத்து – பலகைச்சுற்றுப்பக்கத்திற் பதித்து. இடை – அப் பலகைநடுவில். அலங்கு—விளங்குகின்ற. இரவு-இரா. இருத்தல் ஒப்பவும், காட்சி கடுப்பவும் ஊசலாடியருளெனக் கூட்டுக. புரவு—புரத்தல். சரீரத்துள்ளே மூன்று மண்டல முண்மையைச் சிவபூசைசெய்வார்பாற் கேட்டுணர்க.

சுத்தமு மசுத்தமு மெனப்படுங் கொடுமாயை
தூணாக விருளாணவந்
தொடுத்தநெடு விட்டமாக் கருமப் பெரும்பருதி
தூக்கிய வடங்களாக
வைத்தமா யேயமே பலகையா மூடிவிலா
வான்புவன கோடிமுற்றும்
மகிழ்ந்தாடு வெளியாக வாருயிர்க் குழவிகளை
மரணம் பிறப்பென்னுநோய்

மொய்த்தமணி யூசல்வைத் தாட்டிக் கடைத்தலை
முடங்கா தெடுத்தணைத்து
முதுக்குறை வளித்துமேற் பாமுத்தி வீடுய்த்து
மூவாத வானந்தமாம்
புத்தமிழ் தருத்திமெய்த் தாயாய் வளர்ப்பவள்
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே. (8)

(8) இருள்—கருமை. கருமப்பெரும்பகுதி—மிக்கவினைப்பகுப்பு. மாயேயம்—தநுகரணபுவனபோகங்கள். வெளி—ஆகாயம். கடைத்தலை—கருமந்தொலைந்த முடிவில். முடங்காது—மடங்காமல். முதுக்குறைவு—பேரறிவு. மூவாத—கெடாத. ஆனந்தம்—சிவானந்தம்.

காந்தகப் பொருபடை விதிர்த்தனைய விமையாத
நாட்டத் தரம்பைமாரும்
நளினக் கரங்கூப்பி யெதிர்நிற்கு முகில்வண்ண
நாயகன் முதற்றேவரும்
வேய்ந்தசெம் பொற்பெரும் பூண்களி னிழைத்தபல
வேறுகுல மணிகடொறுமவ்
விரிகதிர்ப் பேதத்தி னுக்கேற்ப நின்னூசன்
மின்னிழல் பரப்புதோற்றம்
வாய்ந்தமெய்த் தொண்டுசெயு மன்பர்க ளுளந்தொறும்
வயங்குபரி பாகபேத
மார்க்கத்தி னுக்கிசைய மன்னிநீ விளையாடும்
வாய்மையைத் காட்டவளிவீழ்
பூந்தகர வார்கருங் கூந்தலமு தாம்பிகை
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே. (9)

(9) வேய்ந்த—அணிந்த. பூண—ஆபரணம். தோற்றம்—காட்சி. பரிபாக பேதமார்க்கம்—பக்குவவேறுபாட்டுநெறி. மன்னி—பொருந்தி. தோற்றம் காட்ட ஆடியருள் எனக்கூட்டுக.

அண்டப் பரப்பெங்கு மண்டிப் படர்ந்தபே
ரானந்த வெள்ளம்வாழ
அருட்சரியை கிரியைசிவ யோகமொடு ஞானமெனு
மதிகசிவ தருமம்வாழக்
கண்டவர்க் கினியநஞ் சோமேசர் வாழநின்
கட்கடைக் கருணைவாழக்
காசினி யொருங்குசிவ பத்திகுரு பத்திசங்
கமபத்தி செய்துவாழ
வெண்டிருப் பூதியுய ரக்கமணி வாழமெய்
விளக்குமஞ் செழுத்துவாழ
வேதநெறி சைவநெறி வாழக் குளந்தைநகர்
மேன்மேற் செழித்துவாழப்
புண்டர நுதற்றொண்டர் தங்குழாம் வாழநீ
பொன்னூச லாடியருளே
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
பொன்னூச லாடியருளே. (10)

(10) ஆனந்தவெள்ளம் என்றது சிவத்தை. அச்சிவத்தை யடைதற்கேது வாகிய மார்க்கமாதலாற் சரியைமுதலியநான்கும் அதனையடுத்திருக்கவைத்துக் கூறினா ரென்க. ஒருங்கு—எல்லாம். சங்கமம்—அடியார்கூட்டம். புண்டரம்—நுதற்குறி, ஈண்டு விபூதிக்குறி யென்க.

ஊசற்பருவமுற்றிற்று.

---

குளத்தூர்
அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
முற்றிற்று.

சிவஞானசுவாமிகள் திருநட்சத்திரம்.

மன்னும் விசுவா வசுவருட மேடமதி
யுன்னிரவி நாட்பகலோ தாயிலியும்—பன்னுந்
திருவாள னெங்கோன் சிவஞான தேவன்
றிருமேனி நீங்கு தினம்.

# விஷயசூசிகை.


| பக்கம். | பரீடற்றேகை. | விஷயம். |
|---|---|---|
| உ | க | திருமால் சக்கரத்தாற் சூரியனைமறைத்தது. |
| ரு | ௪ | முருகக்கடவுள் பிரமனைச் சிறையிட்டது. |
| ,, | ,, | சிவபிரான் மலையை வில்லாகவளைத்தது. |
| ,, | ,, | சிவபிரான் றிரிபுரமெரித்தது. |
| அ | கூ | துர்க்கை மகிடாசுரனைச்சங்கரித்தது. |
| கஉ | க | உமாதேவி சுவாமிதிருக்கண்புதைத்தது. |
| க௪ | ரு | உமாதேவி காஞ்சியிலறம்வளர்த்தது. |
| உ௩ | சு | சந்திரகாந்தக்கல் சூரியகாந்தக்கல். |
| உசு | உ | உபமன்னியமுனிவருக்குச் சிவபிரான் பாற்கடலைவரவழைத்துக் கொடுத்தது. |
| உஎ | ௩ | உமாதேவி கம்பாநதியிற் சிவபிரானைப்பூசித்தது. |
| உஅ | ௪ | சீகாழி பிரளயவெள்ளத்தின்மிதந்தது. |
| ,, | ,, | உமாதேவி திருஞானசம்பந்தமூர்த்திநாயனருக்குத் திருமுலைப் பாலுடன் ஞானமுங் குழைத்துக்கொடுத்தது. |
| உகூ | ரு | உமாதேவி கரத்திற் கருப்புவில்லும் பஞ்சபாணமு முண்டென்பது. |
| ௩0 | அ | உமாதேவி சரவணப்பொய்கையில் ஆறுமுகப்பெருமான் திருவுரு ஆறையு மோருருவாகத் தழுவினளென்பது. |
| ௩உ | உ | சிவபிரான் மதனையெரித்தது. |
| ௩௪ | ரு | தேவர் கடல்கடைந்தது. |
| ,, | ,, | கடலில் விடமெழுந்தது. |
| ௩சு | அ | சிவபிரான் விடத்தையுண்டது. |
| ௪0 | ௪ | கைலாயத்திலிருக்கின்ற அயிராவணமென்னும் யானைக்கு இரண்டாயிரங்கொம்புண்டென்பது. |
| ,, | ரு | விந்தமலை மேருமலையுட னிகலிவீழ்ந்தது. |
| ,, | ,, | மேருமலை பூமிக்காதாரமாயிருக்கின்றதென்பது. |
| ௪உ | கூ | சந்திரன் றேவகுருமனைவியைச் சேர்ந்தானென்பது. |
| ,, | ,, | சந்திரனுக்குக் களங்கமுண்டென்பது. |
| ௪௩ | க | சந்திரன் மேருமலையைச் சூழ்ந்துவருகின்றானென்பது. |
| ௪ரு | உ | சந்திரனுக்குப் பதினறுகலைகளுண்டென்பது. |
| ௪சு | ௪ | சந்திரனிடத்துள்ளவமுதத்தைத் தேவர்களுண்பார்களென்பது |
| ௪எ | ரு | சந்திரனுக்குள்ள கயநோயைச் சிவபிரான்றீர்த்தது. |
| ௪கூ | அ | உமாதேவியைமதியாது தக்கன் றுன்பமுற்றானென்பது. |
| ரு0 | க0 | சந்திரனை இராகுக்கோள் பற்றுமென்பது. |
| ருஉ | உ | இந்திரன் மலைகளின் சிறகரிந்தானென்பது. |
| ரு௪ | ரு | சந்திரனுதயமாகுங்காலமும், அத்தமனமாகுங்காலமுஞ் சிவந்திருப்பானென்பது. |

| | | |
|---|---|---|
| ௬௧ | ௭ | அரிபிரமர்கள் சிவபிரான் அடிமுடியைக் கண்டிலரென்பது. |
| ௬௩ | ௨ | மகளிரான் மலர்வனவற்றுள்ளே அசோகு உதையான்மலர்வது, முல்லை நகையான்மலர்வது. |
| ௬௫ | ௪ | சர்வம் சத்திமயமென்பது. |
| ௬௭ | ௭ | சூரியமண்டலஞ், சந்திரமண்டலம், அக்கினிமண்டலங்களிற் சத்தியிருக்கின்றாளென்பது. |

176041
600 008.

## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௨ | ௨௮ | சூரியனை | சூரியனை |
| ௫ | ௨௨ | வெய்த்துயிர்த்து | வெய்துயிர்த்து |
| ௨௨ | ௩௨ | நன்மை | தன்மை |
| ௨௩ | ௧0 | ததர | தகர |
| ௩௧ | ௨௭ | கிடந்த | கடந்த |
| ௩௨ | ௩௨ | செய்வோன் | செய்வேன் |
| ௩௮ | ௧௪ | சுழலி | சூழலி |
| ௩௯ | ௩ | மான் | வான் |
| ௫௫ | ௨0 | அரத்தை | அரந்தை |
| ௬௯ | ௨0 | கரியநீலப்பூ | நீலப்பூ |
| ௬௪ | ௯ | கட்ட | காட்ட (இப்பிழை பலபிரதிகளி [லில்லை.) |